Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


திருமண வைபவங்களுக்கு
ஏற்ற உயர்தரப் பட்டுப்புடவைகள்
★ கோலம் ★ அபூர்பா
★ பெனாரீஸ்
இதர ரக பட்டு ஜவுளிகளை
நம்பிக்கையுடன்
பெற்றுக்கொள்ள
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41. பெரியகடை வீதி.
யாழ்ப்பாணம்.
T.P - 222 2063

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 தை – 08 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஜ் 10 (21.01.2005) வெள்ளிக்கிழமை இதழ்: 113

## சட்டவிரோதமான முறையில்

# பதவிக்காலத்தை நீடிக்க ஜனாதிபதி சந்திரிகா முயற்சி!



### சர்வாதிகாரப் போக்கில் செயற்படுவதாகவும் ஐ.தே.க.சாடல்

(கொழும்பு)

சுனாமி கடற் கொந்தளிப்பால் நாட்டில் ஏற்பட்ட பேரழிவைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டு சட்டவிரோதமான முறையில் தனது பதவிக்காலத்தை நீடிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

தேர்தல் நடத்தாமல் ஆட்சிக் கா த்தை நீடிக்கும் சர்வாதிகாரப் போக்கையே அவர் கடைப் பிடித்து வருகிறார் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சுனாமி அனர்த்தத்தைப் பயன்படுத்தி - சந்திரிகா சட்டவிரோதமான முறையில் தனது பதவிக்காலத்தை நீடிப்பதற்கு முயற்சிசெய்து வருகிறார் என ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் வாசஸ்தலத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்தக் குற்றச் சாட்டை சுமத்தினார். (12 ஆம் பக்கம் பார்க்க)



## பல்கலைக்கழகத்துக்கு

### அடுத்த ஆண்டில் மேலதிகமாக 2000 மாணவர்கள் அனுமதி!

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக இரண்டாயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் -

இதற்கான அனுமதிப் பரீட்சை இம்முறை இரண்டு தடவைகளில் நடத்தப்படவிருப்பதாகவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மென்டிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது -

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நன்மை கருதி, இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கம் பக்கச் சார்பின்றி உதவிகளை வழங்கவேண்டும்

## நோர்வே அரசு வலியுறுத்து

(கொழும்பு)

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிப் பணிகள் பக்கச்சார்பின்றி மேற்கொள்ளப்படவேண்டுமென நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன் தலைமையிலான குழுவினர் இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளனர்.

நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு பிரதி அமைச்சர் வி.என்.தஸநாயக்காவை நேற்றுமாலை சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்தனர்.

நேற்று மாலை கொழும்பை வந்தடைந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன் தலைமையிலான குழுவினர் நேற்று மாலையே பிரதி அமைச்சர் தஸநாயக்காவை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் இவர்கள் பிரதி அமைச்சரிடம் தெரிவித்ததாவது-

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிவாரணம் மற்றும் புனரமைப்புப் பணிகள் சிறந்த முறையில் இடம்பெற (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொபி அனானைத் தடுத்த அரசாங்கம்

# தமிழ் பகுதிகளை புனரமைக்குமென ஒருபோதும் கருதிவிட முடியாது!



(கிளிநொச்சி)

### கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை

புலிகள்தான் தமிழர், தமிழர்தான் புலிகள் என்று கூறி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கொபி அனான் உள்ளிட்ட வெளிநாட்டுத் தலைவர்களைத் தமிழர் பகுதிகளுக்கு வருவதைத் தடைசெய்த அரசாங்கம் - தமிழர் பிரதேசத்தைப் புனர்நிர்மாணம் செய்துதரும் என்று கருதிவிடமுடியாது.

எனவே அரச, அரசார்பற்ற நிறுவன அதிகாரிகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தைத் துரிதமாக மீள் புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியமர்த்துதல் தொடர்பாக மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலக மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், மாவட்ட அரச திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

# அன்ரன் பாலசிங்கம் வன்னி வருகிறார்!

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இன்று காலை கிளிநொச்சியை வந்தடைவார் எனத் தெரியவருகிறது.

லண்டனில் இருந்து நேற்று மாலை புறப்பட்ட கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதியினர் இன்று அதிகாலை கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தை வந்தடைவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அங்கிருந்து விமானப்படை ஹெலி (12 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு எம்.பிக்களுடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

சமாதானச் செயலகத்தில் இன்று காலை 11 மணியளவில் இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பில் -

தற்போதைய அரசியல்-நிலைமைகள், சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை புனர்நிர்மாணம் செய்தல், (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# கிருமிநாசினி தெளித்தவர் வாந்தி எடுத்து மரணம்!

தோட்டத்திற்கு கிருமி நாசினி தெளித்துவிட்டு வீட்டுக்குச் சென்ற ஒருவர் திடீரென வாந்தி எடுத்து சற்றுநேரத்தில் மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று வேலணைப் பகுதியில் இடம்பெற்றது. 35 வயதான கோபாலபிள்ளை ஜெகதீசன் என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மேற்படி நபர் நேற்று வேலணையில் உள்ள தோட்டம் ஒன்றில் கிருமிநாசினி தெளித்தவர் ஏனத் தெரியவருகிறது. இவர் திடீரென வாந்தி எடுத்த நிலையில் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் வழியிலேயே மரணமடைந்தார். இவரின் காலில் காயம் இருந்ததாகவும் இந்தக் காயத்தின் ஊடாக கிருமிநாசினி இரத்தத்தில் கலந்து மரணம் சம்பவித்திருக்கலாம் என வைத்திய சாலை வட்டாரங்கள் சந்தேகம் தெரிவிக்கின்றன.

மரணமடைந்தவரின் உடல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகிறனர்.

## நாடகமும் அரங்கியலும் செயன்முறை பரீட்சை

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி நாடகமும் அரங்கியலும் பகுதி II பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 24,25 ஆம் திகதிகளில் புதிதாகத் திறக்கப்பட்ட வெளிவாரி பட்டப்படிப்பு பிரிவுக்கான கட்டடத்தில நடைபெறவுள்ளது.

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் சொற்பொழிவுத் தொடரில், இன்று மாலை 6.30 மணிக்கு "அறுமுகம் ஆன பொருள்" என்னும் தலைப்பில் ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி கோ.சி.வேலாயுதம் சிறப்புச சொற்பொழிவாற்றவுள்ளார்.

## இலவச சித்திரபாட கைநூல்

2007 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரத்தில் சித்திரத்தை ஒருபாடமாக எடுக்க விரும்பும் மாணவர்கள் நாளை காலை 10 மணிக்கு ஆத்தி சூடி வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் பாடத்திட்டம் அடங்கிய இலவச கைநூல்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

### டிசம்பர் மாத அதிகரித்த சம்பளத்தை

# சுனாமி அனர்த்த நிதியத்துக்கு வழங்க ஓய்வூதியர் சங்க சம்மேளனம் மறுப்பு

கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்முதல் வழங்கப்படும் 15 வீத ஓய்வூதிய அதிகரிப்பில் ஒருமாத அதிகரிப்பை சுனாமி அனர்த்த தேசிய நிவாரண நிதியத்துக்கு வழங்குமாறு, அகில இலங்கை ஓய்வூதியர் சங்கங்களின் தேசிய ஐக்கியக் குழு விடுத்தகோரிக்கைக்கு, வடமாநில ஓய்வூதிய சங்கங்களின் சம்மேளனம் இணங்க மறுத்துள்ளது.

இது தொடர்பாக வடமாநில ஓய்வூதிய சங்கங்களின் சம்மேளனம் கொழும்பிலுள்ள ஓய்வூதியப் பணிப்பாளருக்கு கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில், தேசிய ஐக்கிய குழுவில் நாம் அங்கம் வகிக்கவில்லை. ஆகவே, அந்தக் கோரிக்கைக்கு எம்மால் இணங்க முடியாது.

ஆகவே, யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களிடமிருந்து குறிப்பிட்ட நிதியத்துக்கான அறவீடுகளை மேற்கொள்ளவேண்டாம். இதே கோரிக்கையை உள்ளூராட்சி ஓய்வூதியப் பிரிவுக்கும் அனுப்புகிறோம். மேலும் இவ்வாறானதொரு பங்களிப்பை யாழ்.மாவட்ட சுனாமி அனர்த்த நிதியத்துக்கு வழங்கி உதவுமாறு, யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களைக் கோரவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வுக் கொடுப்பனவு!

## சுற்றறிக்கை அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத்துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு புதிய சம்பளத்திட்டத்துக்கமைய சம்பளம் வழங்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் மூலம் யாழ். போதனாவைத்தியசாலைக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அமைச்சின் செயலாளரினால் 19.01.2005 திகதி இடப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது-

சம்பளத்திட்டத்துக்கு அமைய சுகாதாரத்துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த டிசம்பர் மாதம் முதல் சம்பளம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சுகாதாரத்துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கான சம்பள உயர்வுக கொடுப்பனவு அனைத்தும் பெப்ரவரி மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதம் தனிச் சிங்கள மொழியில் காணப்படுவதனால் கடிதத்தின் உள்ளடக்கத்தை அறிந்து கொள்வதற்கு அதிகாரிகள் சிரமப்படுவதாகவும் தெரியவருகிறது.

## தலையாழி ஞானவைரவர் அலங்கார உற்சவம்

தலையாழி அருள்மிகு ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் வரை நடைபெறவுள்ளது.

உற்சவ தினங்களில் மாலை 4 மணிக்கு 'மகாபாரதம்' தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இந்தச் சொற்பொழிவை நித்தியானந்தசர்மா நிகழ்த்தவுள்ளார்.(91)

## மருதனார்மடம் விபத்தில் ஒருவர் படுகாயம்!

மருதனார் மடம் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற ஹயேஸ் வான - மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது சிறி கணேஸ் (வயது 44) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

நேற்று மதியம் மழைபெய்து கொண்டிருந்த போது வேகக்கட்டுப்பாட்டை இழந்து இரண்டு வாகனங்களும் விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உலர் உணவு விநியோகம்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

2004 ஆம் ஆண்டு ஆடி மாதத்துக்குரிய 12 ஏ/பி உலர் உணவு அனுமதிப்பத்திரம் கிராம அலுவலர்களூடாக வழங்கப்பட்டு சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாகவும் உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படுகிறது.

இந்த நிவாரணப் பொருட்களில் கோதுமைமாவும் வழங்கப்பட்டு வருகிறது. (113)

## மணற்காட்டில் கியூடெக் சிரமதானப் பணி

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மணற்காட்டு பகுதியில் இளவாலை பிராந்திய கியூடெக் சமாதானக் குழுவினர் நாளை சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் கியூடெக் சமாதானக் குழுவினர் சுழற்சி முறையில் சிரமதானப பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)




சிறி கருமாரி நகையகம்

யாழ்ப்பாணம்

முகவரி மாற்றம்

தற்போது யாழ்ப்பாணம், இல.177D, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவரும் எமது நிறுவனம் தாரண வருடம் தைமாதம் 9 ஆம் நாள் (22.01.2005)சனிக்கிழமை, பழைய நேரப்படி காலை 7.36 முதல் 8.36 வரை வரும் மிருகசீரிட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் இல.205/6, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம். என்னும் புதிய முகவரிக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டு, அங்கு மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அத்தருணம் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சிறி கருமாரி நகையகத்தினர்,
205/6. கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் கட்டடம்,
யாழ்ப்பாணம்.



Direct Start

O/L மாணவர்களுக்கான புதிய கணினி பிரிவுகள் ஜனவரி மாதம் ஒவ்வொரு வாரமும் ஆரம்பமாகும்.

கல்வி ஆண்டு 2005

Diploma in MS Office (MSO)

Diploma in Computer Studies (DICS)

Diploma in Computer Programming (DCP)

Diploma in Desktop Publishing (DTP)

Diploma in Web Design (DWD)

Diploma in Computerised Accounting (DCA)

அனைத்து பாடநெறிகளும் 3 – 4 மாதங்கள்




இலவச பாடநூல்களும் குறிப்புகள்

தற்பொழுது சாவகச்சேரியிலும் ASIAN COMPUTERS

- மூன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சின் அங்கீகாரம்
- 12 ஆண்டுகள் கணினி கல்விச் சேவையில் அனுபவம்
- இலவச பாடநூல்கள் குறிப்புகள் ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- இடம் மாறி கற்கும் வாய்ப்பு
- ICM UK ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- கட்டணங்கள் தவனை முறையிலும் லெுத்தலாம்
- நவீன சமகால கணினி பாடநெறிகள்

ASIAN COMPUTER SYSTEMS

| | | | | |
|---|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். © 021-222 5677 | 108, K.K.S.வீதி, சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) © 071-2501589 | கொடிகாமம் வீதி நெல்லியடி. © 0773-122198 | கண்டி வீதி சாவகச்சேரி. © 077-3039587 | கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. |



நிறைஞ்சனாஸ் சங்கானை
Action king அர்ஜுன் இரு வேடங்களில் மற்றும் லைலா, வடிவேலு நடித்த
ஜெய்சூர்யா
கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
ANACONDA 2

யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந்த் – சினேகா
வடிவேல் – மஞ்சுளி நடித்த
ஆய்த்தம்
கா.நே. (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
சரத்குமார் [இரு வேடம்] நயன்தாரா,
லட்சுமி, வடிவேலு, பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்
ஐயா
இயக்குநர் ஹரி
பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
தனுஷ், ஸ்ரீதேவி,
கபாலி, கருணாஸ்,
குனால் நடித்த
தேவதையைக் கண்டேன்
பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
விஜய், திரிஷா
மற்றும் பலர் நடித்த
திருப்பாச்சி
காட்சி நேரம்: 10.30, 230, 6.30, 9.30 பு.நே.
ஆசன முற்பதிவுகள் 13.01.2005 முதல் ஏற்றுக்கொள்ளப்படும்

# வெளிநாட்டுப் படைகள் தொடர்ந்தும் தங்கியிருப்பதை அனுமதிக்கமுடியாது!

## ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு வந்திருக்கும் வெளிநாட்டுப் படைகள் - மீட்புப் பணிகள் முடிவுற்றதும் இங்கிருந்து வெளியேறிவிடவேண்டும். தொடர்ந்தும் படைகள் இங்கு தங்கியிருப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசிய ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய ரத்னதேரர் மேலும் குறிப்பிடுகையில் -

வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மனிதாபிமான உதவிகளைச் செய்துவருகின்றது. தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்பது எதற்குச் சார்பானது? எந்த அமைப்புடன் தொடர்புடையது? என்பது குறிதது நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. ஆனால், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உண்மையில் வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்துவருவதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதேவேளை - இலங்கையில் மீட்புப்பணிகளை மேற்கொள்ள வெளிநாட்டு இராணுவம் வந்துள்ளது. அவற்றின் சேவையை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், மீட்புப் பணிகள் முடிவடைந்ததும் அவை திரும்பிவிட வேண்டும். அதற்குப் பின்னரும் அவர்கள் இங்கு தங்கியிருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

சுனாமியால் பாதிப்படைந்துள்ள நாட்டின் கரையோரப் பிரதேசங்களை கட்டியெழுப்ப அனர்த்த முகாமைத்துவக் குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார். இதில் அவருக்குத் தேவையான உயரதிகாரிகளே நியமிக்கப்பட்டுள்ளனர். இதை ஏற்றுக்கொள்ள முடியாது.


நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதித்துவமும் மேற்படி அனர்த்த முகாமைத்துவக் குழுவில் இடம்பெறவேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படும்.

பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் கரையோரப் பிரதேசங்களைக் கட்டியெழுப்ப அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. பாதிப்படைந்துள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் சகல தரப்பினரும் இடம்பெறும் வகையிலான குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

இதேவேளை - பாரிய கட்டடங்கள், கைத்தொழில் கிராமங்கள் போன்றவற்றை உடனடியாக அமைப்பதை தள்ளிவைத்துவிட்டு, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க அரசாங்கம் முன்னுரிமை வழங்கவேண்டும்.

சுமார் 80 ஆயிரம் குடும்பங்கள் அகதிமுகாம்களில் இருக்கின்றன. இவர்களுக்கு நிரந்தர இருப்பிடங்கள் அமைத்துக்கொடுக்க வேண்டும்.

இதற்காக நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டம் ஒன்றை நாம் தயாரித்துள்ளோம். இதனை அரசாங்கத்திடம் சமர்ப்பிச் புள்ளோம் என்றும் அவர் கூறினா .



சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான மருத்துவ சிகிச்சைகளை வழங்க ரஷ்யாவிலிருந்து வந்துள்ள பெண் வைத்தியர் ஒருவர் தங்காலை வைத்தியசாலையில் குழந்தை ஒன்றுக்குச் சிகிச்சை வழங்குகிறார்.



சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை மீள் கட்டுமானம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைத் திட்டம் நேற்றுமுன்தினம் அம்பாந்தோட்டையில் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் உயிரிழந்தோருக்கு மௌன அஞ்சலி செலுத்துகின்றனர்.

# யால சரணாலயத்துக்கு மீண்டும் உல்லாசப் பயணிகள் வருகை!

(கொழும்பு)

இலங்கையின் மிக முக்கிய வன விலங்குகள் சரணாலயமாகக் கருதப்படும் யால காட்டுப் பகுதிக்கு உல்லாசப் பயணிகளின் வருகை மீள ஆரம்பித்துள்ளது.

இயற்கை அனர்த்தம் காரணமாக யால சரணாலயப் பகுதியில் 42 உல்லாசப் பயணிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் தற்போது சராசரியாக 100 உல்லாசப் பயணிகள் இந்தப் பகுதிக்குத் தினமும் வந்துசெல்கின்றனர்.

சுனாமி கடல் கொந்தளிப்பு காரணமாக காட்டுப் பகுதியின் உட்பகுதிக்குச் சென்ற விலங்குகள், மீளவும் தமது இடங்களுக்குத் திரும்பியுள்ளதாகவும், இருந்த போதிலும் முன்பு அதிகளவில் இந்தப் பகுதியில் காணப்பட்ட வண்ணத்துப் பூச்சிகள் எவையும் தற்போது அங்கு தென்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சேதமுற்ற வாகனங்களின்

# உரிமையாளர்களை இனங்காணும் திட்டம் அரசாங்கத்தால் அமுல்!

சுனாமி பேரனர்த்தத்தால் சேதமடைந்த வாகன உரிமையாளர்களை இனங்காண்பதற்கான திட்டம் அமுல்செய்யப்படுவதாக மோட்டார் வாகனத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாகனங்கள் தொடர்பான ஆவணங்கள் அழிந்திருந்தால், அங்கீகாரத்துடன் கூடிய பிரதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் விமல் வீரசிங்க தெரிவித்தார்.

இதன்படி சேதமடைந்த வாகனங்களின் உரிமையாளர்கள் தமது பிரதேசத்தின் கிராம அலுவலர்களிடம் வாகனம் சேதமடைந்தமை தொடர்பான அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களைப் பெற வேண்டும். அந்த ஆவணங்களுடன் மோட்டார் வாகன திணைக்கள தலைமையகத்திற்குச் சென்றால், தேவையான பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் சேதமடைந்த வாகனங்களுக்கான காப்புறுதிக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் உதவி செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சுனாமி தாக்குதலை முன்கூட்டி அறிய விலங்குகளைப் பயன்படுத்த திட்டம்!

(கொழும்பு)

சுனாமி கடல் அனர்த்தம் குறித்து முன்கூட்டியே அறியும் முயற்சியில் விலங்குகளைப் பயன்படுத்தலாமா என்பது குறித்து அதிகாரிகள் தீவிரமாக ஆராய்ந்து செய்து வருகின்றனர்.

இது குறித்து விலங்குகள் நலவாழ்வுக்கான சர்வதேச அமைப்பைச் சேர்ந்த அசோக்தான் சோலா என்பவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் சுனாமி தாக்குதல் கடுமையாக இருந்தது. இதில் 30 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் ஆனால், இறந்த வில்ங்கின் ஒரு உடல் கூடக் கிடைக்கவில்லை. சுனாமி தாக்குதல் ஏற்படுவதற்கு முன் பாதுகாப்பான இடங்களைத் தேடி விலங்குகள் ஓடிவிட்டதாக 'பால தேசிய பூங்காவின் காவலர்கள் தெரிவித்தனர்.

எனவே சுனாமியை முன் கூட்டியே அறியும் நடவடிக்கையில் விலங்குகளையும் பயன்படுத்துவது குறித்து அதிகாரிகள் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, எந்த அபாயம் ஏற்பட்டாலும் அதிலிருந்து தப்பிக்கும் முயற்சியில் விலங்குகள் ஈடுபடும். எனவே, விலங்குகள் பயந்து ஓடுவதற்கு காரணம் சுனாமி தாக்குதலா அல்லது வேறு ஏதாவது அபாயமா என்பது குறித்து உடனடியாக அறிந்து கொள்ள முடியாது.

யால தேசிய பூங்காவில் இருந்த யானைகளும் மற்ற விலங்குகளும் சுனாமி தாக்குதல் ஏற்படுவதற்கு பல மணி நேரம் முன்பாகவே பாதுகாப்பான இடத்துக்குச் சென்றுவிட்டன.

சுனாமி தாக்குதல் பற்றி மனிதனைவிட விலங்குகள் முன்கூட்டியே அறியும் அளவுக்கு அவற்றின் உணர்வுகள் மிக நுட்பமாக உள்ளன எனவும் அங்குள்ள நிபுணர்கள் தெரிவித்தனர்.

# வெளிநாடுகளை விமர்சித்தோர் உதவிகளைக் கோருகின்றனர்!

## ஐ.தே.க பிரதித் தலைவர்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கெதிராகக் கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முன்னர் செயற்பட்ட குழுக்கள், தற்போது வெளிநாட்டு உதவிகளை அதிகம் எதிர்பார்த்துள்ளனவென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் திஸ்ஸ அந்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்பு வெளிநாட்டு உதவிகள் குறித்து கடுமையான விமர்சனங்களை சில குழுக்கள் முன்வைத்தன.

அத்துடன் அமெரிக்க ஜனாதிபதியின் உருவத்தைச் செய்து கொடும்பாவி எரித்தவர்கள் இன்று பொருளாதாரத்தின் உண்மைத் தன்மையைப் புரிந்துள்ளனர்.

அதனால்தான் வெளிநாட்டு உதவியில் அவர்கள் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர் எனத் தெரிவித்தார்.

இவரது இந்தக் கருத்திற்குப் பதிலளித்துள்ள ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச -

நாம் ஒருபோதும் அர்த்தமற்ற வகையில் வெளிநாட்டு உதவிகளை தவிர்க்கவோ அல்லது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவோ இல்லை. எந்த ஒரு வெளிநாடும் உதவி செய்ய முன்வரும் போதும் அந்த உதவியின் பின் விளைவுகள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

நாட்டிற்கும் மக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளை நாம் எதிர்த்து வருகின்றோம். இந்த நிலையில் ஒருதலைப்பட்சமாக வெளிநாட்டு எதிர்ப்பு என்ற அளவுக்குள் எம்மை அடக்கிவிட முனையவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (01)

## பூந்தமல்லியிலிருந்த புலிகளை செய்யாறு சிறைக்கு மாற்ற நடவடிக்கை

(புதுடெல்கி)

தமிழகம் பூந்தமல்லி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி சந்தேக நபர்களை செய்யாறு சிறைச்சாலைக்கு மாற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியாளர் சத்யபிரதா காஹு கருத்துத் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளை செய்யாற்றில் தங்கவைப்பதால் அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனக் கூறினார்.

பின்னர் செய்யாறு கிளை சிறைச்சாலையில் விடுதலைப் புலிகளைத் தடுத்து வைப்பதற்காக அமைக்கப்பட்டுவரும் சிறைச்சாலையையும், பாதுகாப்புப் பணிகளையும் மாவட்ட கண்காணிப்பாளருடன் சேர்ந்து பார்வையிட்டார்.

# உடன்பாட்டை மீறினால் தனித்து முடிவெடுப்போம்!

## அரசுக்கு சோமவன்ச எச்சரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி உடன்படிக்கை தொடர்பான விடயங்களில் பாதிப்பு ஏற்படுமானால், தனித்துத் தீர்மானம் எடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க எச்சரிக்கை செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு, ஒரு வருடம் நிறைவுபெற்றதை முன்னிட்டு, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மத்தியில் அவர் உரையாற்றினார். இதில் மேலும் தெரிவித்ததாவது -




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி செ''துகொண்ட ஒப்பந்தத்தின்படி சில அம்சங்களை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி உரிய முறையில் செயற்படுத்தவில்லை. இதனைப் பல தடவைகள் ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

கூட்டமைப்பின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் என்பன பாதுகாக்கப்படவேண்டும். அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் அனைத்தும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் இணைந்து எடுக்கப்படுகின்றதொன்றாக இருக்கும்போதே சாத்தியமாகும்.

நாடு பிரிக்கப்பட்டு காலனித்துவம் மீண்டும் ஏற்படப்போகின்ற நிலையிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைக்கப்பட்டது என்றும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க குறிப்பிட்டார்.

## அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ்

# இந்திய வீராங்கனை சானியா மூன்றாம் சுற்றுக்கு தெரிவு!

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் இரண்டாவது சுற்றில் சானியா மிர்சா அபாரவெற்றி பெற்றார். இதன்மூலம் கிராண்ட்ஸ்லாம் தொடரின் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற புதிய சாதனை படைத்தார். இவர் அடுத்து அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸுடன் மோதவுள்ளார்.

இரண்டாம் சுற்றில் சானியா, 84 ஆம் நிலை வீராங்கனையான ஹங்கேரியின் பெட்ரா மன்டுலாவை எதிர்த்து விளையாடினார்.

சிறப்பாக ஆடிய சானியா முதல் செட்டை 6-2 என்ற எளிய முறையில் வெற்றி பெற்றார். இதே வேகத்துடன் செயறபட்ட இவர் இரண்டாவது செட்டையும் மிக எளிதில் கைப்பற்றினார்.

வெறும் 50 நிமிடங்களில் சானியா 6-2, 6-1 என்ற செட்களில் மன்டுலாவை வீழ்த்தி, மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

கிராண்ட்ஸ்லாம் தொடரின் பெண்கள் பிரிவில் இந்திய வீராங்கனை ஒருவர் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறுவது இதுவே முதல்முறை. 1998 இல் இந்தியாவின் நிருபமா சஞ்சீவ் அவுஸ்ரேலிய ஓபன் தொடரில் இரண்டாவது சுற்றுவரை முன்னேறியதே அதிக பட்சமாக இருந்தது.

அடுத்ததாக சானியா, ஏழாம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸை சந்திக்கவுள்ளார்.

இரண்டாவது சுற்றில் செரினா 6-3, 6-0 என்ற நேர் செட்களில் மடகஸ்காரின் டாலி ராண்டிரைண்டிவியை வீழ்த்தினார்.

இன்னொரு போட்டியில், இரண்டாம் நிலை வீராங்கனையான பிரான்ஸின் அமெலி மௌரிஸ்மோ 2-6, 6-1, 6-0 என்ற செட்களில் ரஷயாவின் தினரா சபினாவையும், நான்காம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா 4-6, 6-0, 6-3 என்ற செட்களில் அமெரிக்காவின் லின்டே லீவாட்டர்சையும் போராடி வென்றனர்.

ரஷ்யாவின் வெராவோனரிவா 3-6, 3-6 என்ற செட்களில் சகநாட்டு வீராங்கனையான வெராடோ செவினாவிடம் தோல்வியடைந்தார். மற்றொரு ரஷ்ய வீராங்கனை ஸ்வெட்லானா குஸ்னட்சோவா 6-2, 6-0 என்ற செட்களில் பிரான்ஸின் மரியன் பார்டோலியை எளிதில் வீழ்த்தினார்.

ஆண்கள் பிரிவில் ஆசியாவின் முதல்நிலை வீரரான தாய்லாந்தின் ஸ்ரீசாபன் 3-6, 4-6, 2-6 என்ற செட்களில் பின்லாந்தின் ஜர்கோ மின்னிடம் தோல்வியடைந்தார்.

ரஷ்யாவின் மாரட் சபின் 6-4, 6-1, 6-3 என்ற செட்களில் செக் குடியரசின் பாடன் உலிஹராச்சையும், அமெரிக்காவின் ஆந்த்ரே அகாஷி 6-3, 6-1, 6-0 என்ற செட்களில் ஜேர்மனியின் ரெய்னர் ஸ்கியூட்லரையும் வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர்.

ஆர்ஜென்ரீனாவின் கஸ்டன் காடியோ 2-6, 6-4, 7-5, 7-6 என்ற செட்களில் அமெரிக்காவின் மார்டி பிஷ்ஷை போராடி வென்றார்.

# பங்களாதேஷ் அணியிலிருந்து மூன்று வீரர்கள் நீக்கம்!

பங்களாதேஷ் - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நேற்று பகல் இரவாக நடைபெற்ற சர்வதேச ஒரு நாள் போட்டியில் பங்களாதேஷ் அணியின் சுழற்பந்துவீச்சாளர் மொகமட் ரபீக் மற்றும் ஆரம்பத் துடுப்பாட்ட விரர் ஜாவிட் ஓமர் இருவரும் காயம் காரணமாக சேர்க்கப்படவில்லை.

இடதுகை சுழற்பந்து வீச்சாளரான ரபீக், சிம்பாப்வேயுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் காயமடைந்தார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஜாவிட் ஓமர் முதலாவது டெஸ்ட் போட்டியில் முழங்காலில் காயமடைந்தார். இதனாலேயே இவ்விருவரும் இந்தப் போட்டியில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

இவர்களுடன் தல்கா ஜுபைர் என்பவரும் நீக்கப்பட்டுள்ளார். இவர்களுக்குப் பதிலாக அலொக் கபாலி, காலித் மஃமூட், அப்துர் ரசாக் மற்றும் நஜ்முல் ஹுசைன் ஆகியோர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## விளையாட்டு

# கிரிக்கெட் போட்டிகள் நாளை ஆரம்பமாகும்

(கொக்குவில்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற விக்ரம் - ராஜன்-கங்கு ஞாபகார்த்த, அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி நாளை சனிக்கிழமை முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தின் தலைசிறந்த அணிகளான யாழ்.பல்கலைக்கழக அணி, யாழ். பற்றீசியன் விளையாட்டுக் கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம், ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகி யன இந்தப் போட்டியில் பங்குபற்று கின்றன.

நாளை காலை 8.30 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியும், பிற்பகல் 1.00 மணிக்கு கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து பற்றீரியன் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன.

# ஐ.சி.சியின் தரவரிசை முறை கிரிக்கெட் வீரர்களுக்கு அறிமுகம்

சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியல் முறை அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

டெஸ்ட், ஒரு நாள் போட்டிகளில் அணிகளின் தரவரிசை குறித்து ஐ.சி.சி.அவ்வப்போது பட்டியல் வெளியிடும். ஆனால் வீரர்களுக்கு என்று பிரத்தியேகமாக தரவரிசை இல்லாமல் இருந்தது. இதனால் பல்வேறு நிறுவனங்கள் சார்பில் வீரர்களின் தரவரிசை குறித்த பட்டியல் வெளியிடப்பட்டு வந்தது.


இதற்குப் பதிலாக ஐ.சி.சி சார்பில் அதிகாரபூர்வமாக தரவரிசை வெளியிடவேண்டும் என வீரர்கள் கோரிக்கை விடுத்தனர். இதை ஏற்கும் வகையில் இனி ஐ.சி.சி சார்பில் வீரர்களின் செயற்பாடு கணக்கிடப்பட்டு தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும்.

இது பற்றி டெல்கியில் தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பீட் கருத்து வெளியிடுகையில் -

2001 ஆம் ஆண்டில் டெஸ்ட் சம்பியன்ஷிப் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போதே ஒரு நாள் போட்டி, வீரர்களின் தரவரிசை முறையை அறிமுகப்படுத்த விரும்பினோம். இப்போது இதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

2007 உலககிண்ணப் போட்டியின் போது வீரர்களுக்கான தரவரிசை அறிவிக்கப்படும். இதற்காக வரும் ஜுன் மாதத்தில் இருந்து இவர்களது செயற்பாடு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என்றார்.

வீரர்களின் செயற்பாடு டெட் டெக்ஸ்டர் முறையில். கணக்கிடப்படவுள்ளது. இந்த முறைதான் கடந்த 18 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி டெஸ்ட் போட்டியில் ஒரு துடுப்பாட்ட வீரர் எடுத்த ஓட்டங்கள், அவர் எதிர்கொண்ட அணியின் பந்துவீச்சு பலம், முடிவு, அவுட் அல்லது நொட் அவுட் போன்றவை கருத்திற்கொள்ளப்படும்.



பந்துவீச்சாளருக்கு அவரது சராசரி, எதிரணி துடுப்பாட்ட வீரரின் பலம் போன்ற அம்சங்கள் ஆராயப்படும். போட்டியில் பங்கேற்கத் தவறினால் ஒரு சதவீத புள்ளி குறைக்கப்படும்.

ஒரு நாள் போட்டிக்கும் இதே முறைதான் பின்பற்றப்படும். ஆனாலும் அதிவிரைவாக ஓட்டம் சேர்த்ததால் கூடுதல் புள்ளி பெறலாம். பந்துவீச்சாளர்கள் குறைந்த ஓட்டம் கொடுத்தால் கூடுதல் புள்ளி கிடைக்கும். உலகக்கிண்ணப் போட்டியில் சிறப்பாக செயற்பட்டால் அதிக புள்ளிகள் பெறலாம்.

முன்னதாக ஒரு நாள் (கேடயம்), டெஸ்ட் (கதாயுதம்) சம்பியன் கோப்பைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் கப்டன் கங்கூலி, முன்னாள் வீரர்களான காவாஸ்கர், ஸ்ரீகாந்த் பங்கேற்றனர்.

அப்போது கங்கூலி - தரப்பட்டியல் அணிகளுக்கான தரவரிசையில் முன்னிலை பெறுவதே முக்கியம்.

ஏனென்றால் கிரிக்கெட் என்பது அணியாக விளையாடக்கூடியது. வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இக்கட்டான நிலையில் களம் இறங்கும் கைஃப் போன்றவர்களது செயறபாடு கவனிக்கப்படாமல் போக வாய்ப்பு உண்டு என்றார்.

### ஹபீசின் பந்துவீச்சு குறித்து ஐ.சி.சியிடம் முறைப்பாடு


பாகிஸ்தான் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான மொகமட் ஹபீஸின் பந்துவீச்சு முறை தொடர்பாக சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் போட்டியில் இவரது பந்துவீச்சு சந்தேகத்துக்கிடமாக இருந்ததாக நடுவர்கள் ரூடி கோட்சென் மற்றும் பீற்றர் பாக்கன் ஆகியோர் ஐ.சி.சியிடம் புகார் செய்துள்ளனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் ஐ.சி.சி இது தொடர்பாக அறிவித்துள்ளது. அடுத்த ஆறு மாதங்களுக்கு மொகமட் ஹபீஸின் பந்துவீச்சுத் தொடர்பாக கண்காணிக்கப்படவுள்ளது.

## சுனாமி நிவாரண நிதி

# உதைபந்தாட்டப் போட்டிக்கான அணிகள் விபரம் அறிவிப்பு!



சுனாமி பேரழிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்ட காட்சி உதைபந்தாட்டப் போட்டி நடத்தப்படவுள்ளது. இதில் ரொனால்டினோ லெவன் மற்றும் அன்ட்ரி ஷெவ்சென்கோ லெவன் அணிகள் மோதவுள்ளன. இந்த இரு அணிகளில் ரொனால்டோ, பெக்காம், ரால், கபு என உலகின் நட்சத்திர வீரர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக இடம்பெற்றுள்ளனர்.


சுனாமி பேரழிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விளையாட்டு உலகம் கைகொடுத்து வருகிறது. சமீபத்தில் சுனாமி கிரிக்கெட் போட்டி மூலம் 50 கோடி ரூபாய் வரை நிதி திரட்டப்பட்டது.

இப்போது காட்சி உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை நடத்த சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் முன்வந்துள்ளது. இந்தப் போட்டி அடுத்தமாதம் 15 ஆம் திகதி ஸ்பெயின் தலைநகர் பார்சிலோனாவில் நடைபெறும்.

இதில் ரொனால்டினோ (பிரேசில், பார்சிலோனா கழகம்), அன்ட்ரி ஷெவ்சென்கோ (உக்ரைன், ஏ.சி. மிலன் கழகம்) தலைமையிலான அணிகள் மோதவுள்ளன. இந்த மகத்தான போட்டியில் விளையாட உலகின் சிறந்த 52 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐரோப்பாவில் சிறந்த வீரர் விருதை வென்ற ஷெவ்சென்கோவின் அணியில் இங்கிலாந்தின் டேவிட் பெக்காம், ஸ்பெயினின் ரால், பிரான்ஸின் ஜிடேன், தியரி ஹென்ரி, ஜேர்மனியின் மைக்கல் பிளாக், இத்தாலியின் ரொபர்ட்டோ பாகியோ, பிரான்செஸ்கோ போடி உட்பட பல பிரபலங்கள் இடம்பெற்றுள்ளனர்.

‘பிபா’ சிறந்த வீரர் விருதை வென்ற ரொனால்டினோ தலைமையிலான அணியில் பெரும்பாலும் பிரேசில் வீரர்களே காணப்படுகின்றனர். ரொனால்டோ, ரொனாலடினோ



என இருவரும் அணியில் இருப்பது சிறப்பம்சம்.

இவர்களைத் தவிர பிரேஸிலின் கபு, லூசியோ, ஜப்பானின் நகாதா, ஆர்ஜென்ரீனாவின் சேவியர் ஜெனட்டி உட்பட பல முன்னணி வீரர்கள் உள்ளனர். இந்தப் போட்டிக்கு ‘நம்பிக்கை தரும் உதைபந்தாட்டம்’ என்று பெயரிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கிடைக்கும் தொகை முழுவதும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனம் இணைந்து ஏற்படுத்தியுள்ள ‘சுனாமி நிவாரண நிதி’ அமைப்புக்கு வழங்கப்படும்.

# மிருசுவிலில் உயிரிழந்தவரின் உறவினர்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

மிருசுவிலில் இராணுவ வாகனம்மோதி உயிரிழந்தவர் தொடர்பாக அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில் இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகப் பூரண விசாரணை நடத்தப்படவேண்டும், உயிரிழப்பு ஏற்படக் காரணமாயிருந்தவருக்கு உரிய தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டும், அத்துடன் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு உரிய நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவினர் கொடிகாமம் பொலிஸாரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது-

முகமாலையில் இருந்து நாகர்கோவில் நோக்கிச்சென்றுகொண்டிருந்த கனரக வாகனம் மோதி குறிப்பிட்ட நபர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும், அப்போது உயிரிழந்தவர் கொடிகாமத்திலிருந்து எழுதுமட்டுவாளை நோக்கிச் சென்று கொண்டிருந்ததாகவும் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச்சென்று நீதிபதியின் கட்டளைப்படி சாரதியைக் கைதுசெய்து, சிறைச்சாலையில் தடுத்துவைத்துள்ளதாகவும், சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணையை மனித உரிமை ஆணைக் குழுவினர் நடாத்தவுள்ளனர்.

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பிறைட் புத்தகங்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு, 'பிறைட்' புத்தக நிறுவனம் இலவசமாகப் புத்தகங்களை வழங்கவுள்ளது.

இந்த அனர்த்தத்தால் புத்தகங்கள், குறிப்புகள், பதிவுகள் போன்றவற்றை இழந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் பரீட்சை நெருங்கி வரும் காலத்தில் கல்வியைத் தொடரமுடியாமல் சிரமப்படுகின்றனர். இதனால் ஒரு தொகுதி புத்தகங்கள் இம்மாத இறுதியில் இலவசமாக வழங்கவுள்ளனர்.

இதேவேளை எழுத்தாளர்கள் மற்றும் நூல் வெளியீட்டாளர்கள் வழங்கும் நூல்களையும் மாணவர்களுக்குச் சென்றடைய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே பாதிக்கப்பட்ட பாடசாலைகள் தேவையான புத்தகங்களின் வகையையும், அளவையும் அறியத்தருமாறும், இந்தச் செயற்பாட்டில் யாவரையும் இணைந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

"பிறைட் புத்தக நிறுவனம் 'வரையறையுள்ளது' S-27 முதலாம் மாடி கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி, கொழும்பு-11" என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# நெடுந்தீவு பிரதேச விளையாட்டு விழா ஆரம்பம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசமட்ட 2005 ஆம் ஆண்டுக்கான, பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழு விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளன.

நாளை சனிக்கிழமை ஆண் - பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆண் - பெண்களுக்கான எல்லே போட்டியும், திங்கட்கிழமை ஆண் - பெண்களுக்கான கபடிப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்குப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளதுடன், கபடி, கரப்பந்தாட்டப் போட்டிகள் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்திலும், எல்லே போட்டி சிக்கிரியாம் பள்ளம் பொது விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளது. (113)

# இந்து தர்மாசிரியர் தேர்வு இந்த ஆண்டுமுதல் அறிமுகம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் - இந்து தர்மாசிரியர் தேர்வு எனும் பரீட்சையொன்றை இந்த ஆண்டுமுதல் அறிமுகப்படுத்தவுள்ளது. இந்தப் பரீட்சை அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் இந்து மாணவர்களின் இந்துசமய அறிவை மேம்படுத்துவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டது.

இந்த அறநெறிப் பாடசாலை இறுதிநிலைப் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் அல்லது க.பொ.த. (உ.த) பிரிவில் இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுள் ஒன்றை ஒரு பாடமாகக் கொண்டு சித்திபெற்றவர்கள் அல்லது பண்டிதர் பட்டம் பெற்றவர்கள், அல்லது சைவப்புலவர் பட்டம் பெற்றவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் தகைமையுடையவர்கள் ஆவர்.

இந்தப் பரீட்சை ஐந்து வினாப் பத்திரங்களைக் கொண்டுள்ளதுடன், இவை இந்து சமயம், இந்து சமய வரலாறு, தத்துவங்கள், பண்பாட்டம்சங்கள், கலைகள், சைவ சமயம் போன்ற பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கியுள்ளன. வேதங்களும், ஆகமங்களும், சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும், சைவசமய வரலாறு, பன்னிரு திருமுறைகள், கோயில்களும் கலைகளும் ஆகிய தலைப்புக்களில் அமைகின்றன.

மேற்குறித்த ஐந்து வினாப் பத்திரங்களும், மிகவும் பரந்த மற்றும் ஆழமான விடயதானங்களைக் கொண்டவையாதலால் இந்து அறநெறிப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான அதிபர்கள், ஆசிரியர்கள், பரீட்சார்த்திகளுக்குப் போதிய விளக்கமளித்து ஊக்குவிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஐந்து வினாப் பத்திரங்களிலும் சித்திபெறும் பரீட்சார்த்திகள் 'தர்மாசிரியர்' எனும் சான்றிதழைப் பெறும் தகைமை உடையவராவார். இந்த ஆண்டுமுதல் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதத்தில் இந்தப் பரீட்சை நடைபெறும்.

இந்தப் பரீட்சை தொடர்பான விதிகள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பன கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் திணைக்களத்தின் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்குப் பாடத்திட்டம் மற்றும் மாதிரி வினாப்பத்திரத் தொகுதி என்பனவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு நடுப்பகுதியளவில் பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரும்போது தகுதிமிக்க விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## தேசிய டிப்ளோமா பட்ட நிறைவு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூன்றாவது அணி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான பட்டநிறைவு விழா - எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தவிடயம் தொடர்பாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள கலந்துரையாடலில் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது பங்குபற்றுமாறு பீடாதிபதி அறிவித்துள்ளார்.

## அடையாள அட்டை கண்டெடுப்பு

புளியம்பொக்கணை கரவெட்டித்திடல் பழையபுன்னை நீராவியடியை சேர்ந்த நாகராசா நகுரதா என்பவரது தேசிய அடையாள அட்டையும், பயண அட்டையும் கண்டெடுக்கப்பட்டு கரவெட்டி அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அரசியற்துறை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (12)

## வருமானவரி அலுவலர்களுக்கான பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி வருமானவரி பரிசோதகர்கள், மேற்பார்வையாளர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு வலிகாமம் தெற்கு, சுன்னாகம் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் த.நிர்மலானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு சம்பந்தப்பட்ட அனைவரையும் சமுகமளிக்கும்படி சங்கச் செயலாளர் பொ. கிருஸ்ணகுமார் கேட்டுள்ளார். (48)

## பொன்னாலைக்கு கிராம அலுவலர் நியமனம்

(பொன்னாலை)

பொன்னாலையில் ஜே/170 கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றிய கிராம அலுவலர் வேறொரு பிரிவுக்கு இடமாற்றப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த சில மாதங்களாக இந்தப் பிரிவில் தற்காலிக கிராம அலுவலராகக் கடமையாற்றிய ஸ்ரீரஞ்சன் தற்போது நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்.

இந்த மாதம் சங்கானை பிரதேச செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து கிராம அலுவலர்களுக்குமான உள்ளக இடமாற்றத்தைத் தொடர்ந்தே இவர் ஜே/170 பிரிவுக்கு நிரந்தரமாக்கப்பட்டுள்ளார். (207)

## சாவகச்சேரியில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்

சாவகச்சேரியில் நீர்ப் திட்டத்தின்கீழ் 45 இலட்சம் ரூபா செலவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அமைக்கப்பட்டு வருகிறது.

தென்மராட்சி சுகாதார வைத்திய அதிகாரிக்கான இந்த அலுவலகத்தின் கட்டுமானப் பணிகள் எண்பது சதவீதம் முடிவடைந்துள்ளது. எனவே இந்த அலுவலகம் அடுத்த மாதம் திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

## நிதி சேகரிப்பு

வலி.கிழக்கு பிரதேச செயலகத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் எதிர்கால அபிவிருத்திக்காக வலி.கிழக்கு பிரதேச மக்களிடம் இருந்து நிதி சேகரிக்கப்பட்டுவருகிறது.

இவ்வாறு சேகரிக்கப்படும் நிதி விரைவில் அரச அதிபரூடாகப் பாதிக்கப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதால், உதவ விரும்புவோர் வலி.கிழக்கு பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (90)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வல்வை சிவகுரு வித்தியாசாலை மாணவர்களுக்கு- யாழ்.கல்விக் கோட்டப் பணிப்பாளர் திருமதி கைலைநாதன் தலைமையில், யாழ்ப்பாண பாடசாலைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து 400 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் உடற்கல்விப் பணிப்பாளர் அருணகிரிராஜாவும் கலந்து கொண்டார்.

## 'பொப் லொப்' ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட "பொப் லொப்" செயற்திட்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஆசிரியர் எவரும் தெரிவுசெய்யப்படாமல் இருந்தால் தரம் 4 இல் கல்வி கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர் ஒருவரைத் தெரிவுசெய்து அனுப்பி வைக்குமாறு பாடசாலையில் அதிபர்களுக்கு வலயக் கல்வி நூலக இணைப்பாளர் மீரா அருள்நேசன் அறிவித்துள்ளார்.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### இரண்டாவது அகவையில்



பெயர் : நி.நிதர்ஷா
முகவரி : யாழ்ப்பாணம்.



பெயர் : ந.மாதுளா
முகவரி : அல்வாய்

### மூன்றாவது அகவையில்



பெயர் : சே.அபிஷாகர்
முகவரி : உடுப்பிட்டி

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------
------------------------
முகவரி :------------------------
------------------------
பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


# பருத்தித்துறை நீதிமன்றில் பகிரங்க ஏலவிற்பனை!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் - பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாததுமான பொருட்கள் நாளை காலை 9 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற அலுவலகத்தில் பகிரங்க ஏலவிற்பனை நடைபெறவுள்ளது.

இதில் கன்ரர் வாகனங்கள், ஓட்டோ (முச்சக்கர வண்டிகள்), மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள், தையல் இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் ரேடியோக்கள், மண்வெட்டிகள், சவள்கள், கோடரிகள், படகு உட்பட பலவிதமான பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதென பருத்தித்துறை நீதிமன்றின் பதிவாளர் வல்லிபுரம் மார்க்கண்டு தெரிவித்தார். (12)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை உள்ளூராட்சி ஆணையாளர் பார்வையிட்டார்

வடமராட்சிப் பகுதிக்கு வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் விஜயலட்சுமி விஜயம்செய்து சுனாமி அழிவுகளால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்.

இவருடன் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. இராசையாவும் வருகைதந்து பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபை பிரதேசங்களை பார்வையிட்டார். பின்னர் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குச் சென்று சுனாமி அழிவுகளைப் பார்வையிட்டு திருகோணமலை திரும்பியுள்ளார். (17)

# முறைசாராப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்வி மேம்பாட்டுத்திட்டம் இவ்வாண்டு ஆரம்பிக்கவுள்ள பயிற்சி நெறிக்கு பாடசாலைக் கல்வியை முடித்த, பாடசாலை கல்வியை இடையில் நிறுத்திய இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முறைசாராக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தில் கல்வி உயர் கல்வி அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு ஆகியவற்றின் ஆலோனையின்படி பல்வேறு திட்டங்களை யாழ்.கல்வி வலயம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதில் எழுத்தறிவூட்டல், கணினி, கணினிப் பொறி திருத்துதல், நவீன கைப்பணி உற்பத்திகள், தலை அலங்காரம், மனையியல், வீட்டு மின்சுற்று, வீட்டு முகாமைத்துவம், கேக் ஐசிங், சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ், ஆங்கிலம்), ஸ்கிறீன் பிறிண்டிங், மரவேலை, மேசன், கடைச்சல் ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிநெறியில் இணைய விரும்புவோர் விண்ணப்பங்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு யாழ்.வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

# ஆரோக்கியத்தின் அத்திவாரம்

## பாலூட்டும் தாய்மாரின் கைகளில்



சிநேகிதியே

தாய்ப்பால் போன்ற மிகச்சிறந்த சத்துணவு வேறுஎதிலும் இல்லை என்பது மருத்துவ வல்லுனர்களின் கூற்றாகும். தமது அழகு குறைந்து விடும் என்று சில தாய்மார்கள் பாலூட்டுவதை தவறாகக் கருதிக் கொண்டு, பால் கொடுப்பதை தவிர்க்கின்றனர். இன்னும் சில தாய்மார்கள் வேலைக்குச் செல்வதனாலும் தாய்ப்பால் கொடுப்பதை தவிர்த்துவிடுகிறார்கள். தாய்ப்பாலில் மிகையான விற்றமின்களும், சத்துக்களும் இருக்கின்றன. இயற்கையாகவே தாய்ப்பால் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. ஆகையால் குழந்தை பிரசவித்த தாய்மார்கள் தம் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதில் ஏற்படும் நன்மைகளைக் கருத்திற் கொண்டால், பிள்ளை ஆரோக்கியமாக வளர்ச்சி அடையும். குழந்தை பிறந்து ஒருமணி நேரத்தில் தாய் தன் மார்பில் வைத்து பால் கொடுக்கின்ற பழக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். குழந்தை கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சுவதால், பால் சுரக்கத் தொடங்கும். குழந்தை எவ்வளவு நேரம் பால் குடிக்க விரும்புகிறதோ அவ்வளவு நேரம் மிக பொறுமையாகவும், ஆதரவாகவும், அன்புடனும் குடிப்பதற்கு அனுமதித்தல் அவசியம். குழந்தைக்குப் பாலூட்டும்போது அநாவசிய யோசனையோ, மனப்பதற்றமோ அல்லது வேறு சிந்தனையோ இருக்கக் கூடாது.

இன்று அநேக தாய்மார் தாய்ப்பால் கொடுப்பதை ஒரு சிரமமாக நினைத்து, கடைகளில் விற்பனை செய்கின்ற பால் மாவைக் கரைத்துக் கொடுக்கின்றனர். இது மிகவும் தவறான செயலாகும். தமது சுகங்களுக்காக வளரும் பிஞ்சுகளை வேரிலேயே கிள்ளி விடுகின்ற ஒரு செயலாகவே இதைக் கருத முடியும்.



புட்டிப் பாலை குடிக்கும் குழந்தை ஆரோக்கியமானதாக வளரும் வாய்ப்புக்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. காரணம் தாய்ப்பாலில் இருக்கின்ற போஷாக்குகளும், நோய் எதிர்ப்பு சக்திகளும் புட்டிப் பாலில் இல்லை. அநேக குழந்தைகள் புட்டிப் பால் குடிப்பதால் மலச்சிக்கல், வயிற்றோட்டம், வயிற்றுக் கோளாறு, சளித் தொல்லை போன்ற நோய்த்தாக்கத்துக்குள்ளாகின்றனர்.

சற்றுச் சிந்தித்தால், குழந்தை முக்கிய உறவை இழந்து விடுகிறது. தாய் தன் குழந்தைக்குப் பாலூட்டும்போது தனது மார்போடு அணைத்து, தனது அன்பைப் பொழிவாள். அத்துடன் குழந்தை சுகமான தூக்கத்தைப் பெற்றுக் கொள்ளும்.

தாய்ப்பாலை கட்டாயமாக ஆறு மாதங்களுக்காவது கொடுக்க வேண்டும். தாய் குழந்தைக்குப் பாலூட்டும் முன்பே நல்ல சத்துள்ள உணவுகளையும், பானங்களையும் உட்கொள்ளவேண்டும். இதனால் குழந்தைக்குப் போதுமான தாய்ப்பால் உடனடியாகச் சுரக்கும். குழந்தைகளுக்கு செலவழிக்கும் புட்டிப் பாலுக்கான செலவை தாய் தனது உடல் ஆரோக்கியத்துக்கான உணவை தேர்ந்தெடுத்து உண்ணும் போது, குழந்தை மாத்திரமல்ல, தாயும் எந்த விதமான நோய்த்தாக்கங்களின்றி தன்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம். அநேகமான பாலூட்டும் தாய்மார்கள் போதியளவு நீர் குடிப்பதில்லை நீரை தாராளமாக குடிப்பதால் குழந்தைக்கு போதியளவு நீர் தாய்பாலினூடாக கிடைக்கிறது.

இதனால் குழந்தையினது எந்த வித பிறதொல்லைகளின்றி உடலுக்குத் தேவையான நீரைப் பெற்று, ஆரோக்கியமான பிரஜையாக வளரமுடியும். பிள்ளையின் ஆரோக்கியமான வளர்ச்சியின் அத்திவாரமே பாலூட்டும் தாய்மாரின் கைகளில் தான் தங்கியுள்ளது.

## ஆண்களின் இதயத்தைவிட பெண்களின் இதயம் வலுவானது

'பெண்களை விட ஆண்கள் குறைந்த வயதில் இறந்து விடுகின்றனர். ஆண்களின் இதயம் நடுத்தர வயதின்போது வலுவிழக்கத் தொடங்குவதே இதற்குக் காரணம்' என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. லண்டனில் உள்ள லிவர்பூல் ஜோன் மூரெஸ் பல்கலைக் கழகத்தை சேர்ந்த டேவிட் கோல்ட் ஸ்பிங்க் என்பவர் தலைமையில் ஒரு குழு மனித மேம்பாடு மற்றும் மூப்புத் தன்மை குறித் து ஒரு ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வில் இருந்து –



18 வயதில் இருந்து 80 வயது வரை ஆரோக்கியமான 250 பேரிடம் ஆய்வுகள் மேற்கொண்டனர். பிரிட்டனில் ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 75 எனவும், பெண்களின் சராசரி ஆயுட்காலம் 80 எனவும், இதில் 60 வயதுக்கு மேற்பட்ட பெண்களின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருகிறது.

பெண்களுக்கு வயது அதிகரிக்கும் போது அவர்களின் இதயத்தின் செயல் பாடுகள் வலுவிழப்பதில்லை என்பதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது. அதற்கு மாறாக ஆண்களுக்கு 18 வயது முதல் 70 வயதுக்குள் இதயம் 20 முதல் 25 சதவீதம் வரை வலுழந்து வருகிறது.

இதயத்தின் துடிப்பை, சுருங்கி விரியும் தன்மையை சீராக வைத்திருக்க இதயத்தின் உள்ளே லட்சக்கணக்கான செல்கள் உள்ளன. ஆண்களுக்கு 20 வயதில் இருந்து 70 வயதுக்குள் இந்த செல்களில் மூன்றில் ஒரு பகுதி அழிந்து விடுகிறது. அதை ஈடு செய்யும் வகையில் புதிய செல்கள் உருவாவதில்லை. ஆனால், அதிசயிக்கத்தக்க வகையில் பெண்களின் இதயங்களில், இந்த செல்களின் அழிவு மிக குறைந்த அளவிலேயே உள்ளது.

மேலும், வயது அதிகரிப்பதால் பெண்களின் இதயம் வலுவிழப்பதில்லை. அதாவது 70 வயதான ஒரு பெண்ணின் இதயம் 20 வயது பெண்ணின் இதயம் போல் சுறுசுறுப்பாகவே இயங்குகிறது. இதுவே ஆண்களைவிட பெண்கள் அதிக வயது வரை உயிருடன் இருப்பதற்கு காரணமாகிறது.

பெண்களுக்கு மாதவிடாய் நிற்பதால், ஹார்மோன்களில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுகின்றன. இருப்பினும், இதனால், பெண்களின் இதயத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை. ஆண்கள் தங்கள் இதயத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்த தொடர் உடற்பயிற்சியில் ஈடுபட்டால், நல்ல பலன் கிடைக்கும் என அந்த ஆய்வு தெரிவிக்கிறது

## உடல் நலம் உங்கள் கைகளில்



உணவில் பக்றீரியா சேர்ந்துவிட்டால், உணவு நச்சுத் தன்மையை அடைகிறது. இதை உண்பதால் தசைகளோடு நரம்பு மண்டலமும் பாதிக்கப்படுகிறது. பழுதாகிப் போன பழங்கள், மீன், சமைத்த கறி போன்றவற்றை உண்ணக் கூடாது. காய்கறி வகைகள், கீரைகள், பழங்கள் போன்றவற்றை நன்கு நீர்விட்டுக் கழுவிய பின்னரே பயன்படுத்த வேண்டும்.

உணவில் நச்சுத்தன்மை கலந்துவிட்டால், சில அறிகுறிகள் தோன்றும். சாப்பிட்ட 6 மணி நேரத்துக்குள் வாந்தி ஏற்படும். மெல்ல மெல்ல கண்ணின் பார்வை குறையும். மலச்சிக்கல் ஏற்படும். இந்த அறிகுறிகள் தோன்றினால் உடனே மருத்துவரை அணுக வேண்டும்.

எலிகளின் எச்சம் உணவில் கலந்து இருக்கலாம். இலையான்கள் மூலம் உணவில் நோய் அணுக்கள் தொற்றி இருக்கலாம். இதற்கு அறிகுறி சாப்பிட்ட 12 மணி நேரத்துக்குள் வாந்தியும், வயிற்றுக் கோளாறுகளும் தோன்றும்.

பூச்சிக் கொல்லி மருந்து இருந்த போத்தல் மருந்து ஆகியவை தவறுதலாக உணவுடன் கலந்து விட்டால், இரசாயனக் காரணங்களால் உணவு நஞ்சாகிறது. இரசாயனக் காரணங்களால் அல்லது குடலில் எரியும் பொருட்களை உட்கொண்டால், உட்கொண்ட அரைமணி நேரத்துக்குள் வாந்தி வந்துவிடும்.

பொதுவான அறிகுறி - வயிற்றைப் பிசையும் வலி தோன்றும். வாந்தியும், குமட்டலும் இருக்கும்பேதியாகும். உணவு உண்ணும்போது அலட்சியம் கூடாது.

சுகாதாரமான சத்துள்ள உணவு உண்டு ஆரோக்கியமாக வாழ்வோம்.

## மனம்

(அறிமுகம்)

போர் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணங்களால் பல்வேறு வகையில் உளநலம் பாதிப்புக்குட்பட்டவர்களின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களின் மனதை ஆற்றுப்படுத்தும் முகமான கருத்துக்களை உள்ளடக்கி இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரிக்கப்படுகிறது.



மனம் என்பது சிந்தனை வழி செயற்படும் மனிதனின் நடத்தைக் குரிய ஒன்று. சிந்தனை மனிதனிடமுள்ள ஐம்புலன்கள் வழியாக மூலைக்குச் சென்று, மூளை பகுத்துக்கொடுக்க, சிந்தனை உருவாக்கப்படுகிறது. அந்தச் சிந்தனை வழி மனிதன் தன் மனதைப் பக்குவப்படுத்தித் தன் நடத்தைகளை வெளிக்காட்டுகிறான்.

இந்த மனம், இட் அகம், அதியகம் என்ற மூன்று நிலைகளைக் கொண் டது.

இட் என்பது, மனிதன் விழித் திருந்து செயற்படும் ஒவ்வொரு கணமும் இயங்கிக் கொண்டிருக்கும். அது உடனுக்குடன் தீர்மானம் எடுத்து, உடன் உணர்ச்சிவசப்பட்டு செயற்படும். இதை வெளிமனம் என்றும் கூறலாம்.

அதியகம் என்பது அடிமனம். இந்த மனம் அமைதியானது, நீதியானது, தன்னை வெளிக்காட்டாது. தாமதமாகத் தன் நடத்தைகளைக் காட்ட விளைவது. இந்த மனம் மிகவும் மென்மையானது, அது தெளிந்த நீரோடை போன்றது. அதிக பாதிப் பிற்குட்படக் கூடியது. பாதிப்பிற்குட் பட்டால் மாற்றுவது மிகமிகக் கஷ்டமானது. பாதிப்பிற்குட்பட்ட அதே பாதிப்பை மீண்டும் சந்திக்கும்போது, அதே உணர்வவைப் பெற்றால்தான் பழைய நிலைக்கு மீளக்கூடியது. இதில் பொறிவழி காண்கின்ற அதீத மான அச்சத்தை ஏற்படுத்தும் காட்சிகள், கேட்கின்ற சம்பவங்கள், நினைக்கின்ற நினைவுகள் ஆழமாகப் பதிந்துவிடும். இத்தகைய பதிவுகள் ஒருவரின் வாழ்க்கையில் படிப்படியாக நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும். மூளைப் பிசகு, மறதி சுயமாகச் சிந்திக்க முடியாமை, தானாய் சமூ கத்திற் கொவ்வாமல் செயற்படல், கொடூர செயல்களில் ஈடுபடல், நடைப்பிணமாய் இருத்தால், உடல் செயலற்றுப் போதல், நோயாளியாதல் போன்ற நிலைக்கு ஒருவரை உருவாக்கக் கூடியது.

அகம் என்பது இட் என்கின்ற அதிவேகம் கொண்ட வெளிமனச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதாகவும் அதியகம் என்கின்ற அடி மனத்தின் தாதம் மென்மை என்னும் செயற்பாட்டை இட் என்னும் வெளி மனச் செயற்பாட்டின் தன்மைக் கேற்றவாறு இசைவுபடுத்துவதாகவும் சமநிலையாளாகச் செயற்படக் கூடியது. இதனை உள்மனம் என்றும் குறிப்பிடலாம்.

இட் என்கின்ற வெளி மனமே நேரடியாகப் பொறி வழிக்காட்சிகளைக் கண்டுகொள்ளும். அந்த மனதின் உணர்வலைகள் அகத்துடன் தொடர்பு கொண்டு சீர்செய்யும் அதீத காட்சிகளும், கேட்கின்ற சம்பவங்களும் இட் அகம் என்பவற்றை மீறி அதியகத்தைச் சென்றடையக் கூடியது.

இந்த நிலையில் இட் என்னும் வெளிமனம் கண்ட காட்சிகளையும், கேட்ட சம்பவங்களையும், அதனால் ஏற்பட்ட வெளிமன உந்தல் செயற்பாடுகளை வெள்ளத்தால் மனித மனத்தின் இயல்பாகச் சொல்லி அந்த அதிர்வலைகள் மனிதனின் அடி மனதில் பதியாதபடியும், பதிந்தாலும் அதிலிருந்து மீள அந்த மனிதனுக்கு எடுத்தியம்பும் வழிகாட்டிகளாகவும், அந்த வழிகாட்டல்களை அகம் என்ற உள்மனம் எடுத்தியம்புவதாகவும் இனிவ்ரும் கட்டுரைகள் வரையப்பட்டுள்ளன. (தொடரும்...)

மலர். சின்னையா.

# பிஞ்சு முகத்தின் தேடல்

அம்மா ஒரு மூலையில் படுத்திருந்தாள். அவள் கண்கள் மூடியிருந்தாலும் கடைவிழியில் கண்ணீர் வடிந்திருந்தது. அவள் தூங்கவில்லை. மூச்சு மட்டும் அடிக்கடி பெருமூச்சாய் வந்து கொண்டிருந்தது. அவளுக்குப் பக்கத்தில் என்னுடைய கடைசித் தங்கச்சி படுத்திருந்தாள். அவளுடைய உடம்பில் துணியில்லை. இப்போது தான் அவளுக்கு 3 மாதம் முடிந்திருக்கிறது. அதனால்



அவளுடைய உடுப்பைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை. சற்றுத்தள்ளி என்னுடைய பெரிய அக்கா குந்தியிருந்தாள். அவள் ஒரு கிழிந்த சேலையைச் சுற்றியிருந்தாள். ஒரு தலப்பால் தலையில் முக்காடு போட்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் என்னுடைய தம்பிமார் இரட்டைப் பிறவிகள். பிறக்கும்போதே ஊனமாகப் பிறந்தவர்கள். அவர்களால் நடக்கமுடியாது. 5 வயதாகியும் பிள்ளையாரைப்போல இருந்த இடத்திலே இருப்பதுதான் அவர்கள் தொழில். சூம்பிய கால்கள். உப்பிய வயிறு. எங்கள் வீட்டுக் கலண்டரில் இருந்த பிள்ளையார் போல... அவர்கள் இருவரையும் மட்டும் காணவில்லை. எனக்கு நெஞ்சில் சுரீரென வலித்தது. நினைவுச்சக்கரம் சுழலத் தொடங்கியது.

அன்றைக்கு... காலை நல்லபடி விடிந்தது. எல்லோரும் விடிய வெள்ளென எழும்பிவிட்டோம். எல்லோரும் கோயிலுக்குப் போவதாகத் திட்டம். அப்பாவின் வானிலே போவதாகத் திட்டம். முதல்நாள் இரவு எல்லோரும் சாப்பிடத் தொடங்கியபோது... அப்பா அந்தச் செய்தியைச் சொன்னார். நாளைக்கு எல்லோரையும் கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு போகப்போறன்! என்ரை வாகனத்திலை எல்லாரும் போகலாம்! எனக்கு நல்ல மகிழ்ச்சி கையைத் தட்டினேன். சாப்பிட்ட கையிலிருந்த சோறு எல்லாம் தெறித்தது. சின்னக்காவின் முகத்திலும் விழுந்தது. அவள் கோபத்தோடு எழும்பி வந்து இடதுகையால் என் தலையில் குட்டினாள். நான் அம்மா... என்று கத்தினேன். அப்பாதான் என்னைச் சமாதானப் படுத்தினார். எச்சில் கையாலை நான் அப்படிச் செய்தது பிழைதான். நான் சின்னக்காவிடம் மன்னிப்புக் கேட்டேன். அப்பா சொன்னார்! என்ரை அரசி நல்ல பிள்ளை!... எல்லோரையும் நல்லாப்

பாப்பாள்! அவர் சொன்னபோது என் வயிற்றில் ஒரு சோகம் புரண்டு வந்தது. எனக்கு விளங்கவில்லை. பெரியக்கா என்ரை தலையைத் தடவினாள். நாளைக்கு அவளுடைய பிறந்தநாள். அவளுக்கு 16 வயது நிறைகிறது. எனக்கும் அவளுக்கும் 6 வயது வித்தியாசம். அவளின்ரை முகத்திலை எப்பவும் ஒரு புன்னகை. நாங்கள் அவளுக் குப் புன் னகை அரசி எண்டு பட்டம் வைச்சிருக்கிறம்.

அம்மா சொன்னாள்!... கோயிலுக்குப் போட்டுத் திரும்பி வரேக்கை கடற்கரைக்கும் போட்டு வருவம். இந்தப் பொடியளைக் கடற்கரை மணலில் காலைக் கொஞ்சநேரம் புதைச்சு வைச்சால் நல்லதெண்டு சொல்லுகினம். ஓ! அதுக்கென்ன வரக்கை போவம்... அப்பா சொல்லிக்கொண்டிருக்க வாசலில் சைக்கிள் மணிச்சத்தம் கேட்டுது. அப்பா எழும்பிப் போனார். சாப்பிட்ட கைகூடக் கழுவவில்லை. பெரியக்கா அவர் சாப்பிட்ட கோப்பையில கிடந்த மிச்சத்தை எடுத்து அம்மா விட்டைக் குடுத்தாள். அம்மா அதைச் சாப்பிட நான் சொன்னன்! அம்மாவுக்கு வேலை எல்லாவற்றை மிச்சத்தையும் சாப்பிடுறதுதான். போடி! சாப்பாட்டைக்கொட்டினால் பிறகு பொறுக்கித்தான் சாப்பிடவேணும்... போ... போய்க் கையைக் கழுவு. நான் கையைக் கழுவ வெளியே வந்தேன். அப்பாவும் வந்தவரும் பேசினது என்ரை காதிலை தெளிவாக் கேட்டுது.

மச்சான் நீ சரியா 5 மணிக்கு வந்திடு. ஒருமணித்தியாலத்திலை திரும்பி விடலாம். பிறகு பிள்ளையளைக் கடற்கரையிலை விட்டிட்டுப் போய் ஏத்தி விடலாம். அப்பாவும் தலையை ஆட்டினார். வந்தவர் அப்பாவின் கையிலை ஏதோ கொடுத்துவிட்டுப் போனார். நான் பூனைபோல உள்ளே வந்துவிட்டேன். அப்பா ஒருவரிடமும் ஒன்றும் பேசாமல் அறையுக்கை போனார். அம்மாவும் பின்னாலை போனாள். பிறகு இரண்டு பேரும் சிரிச்சுக்கொண்டு வெளியே வந்தினம். அப்பா சொன்னார்! நாளைக்கு விடிய வெள்ளென எனக்கு ஒரு ஓட்டம் வந்திருக்கு. நான் போட்டு 7 மணிக்கு வருவன் எல்லோரும் வெளிக்கிட்டு ரெடியா இருக்கவேணும்.

அடுத்தநாள் அப்பா காலை 5 மணிக்கு அம்மா குடுத்த கோப்பியைக் குடிச்சுப்போட்டு வாகனத்தை எடுத்தார். அது கொஞ்சநேரம் இடக்குப் பண்ணியது.

என்ன! ஏதோ தடைபோலை கிடக்கு!... அம்மா சொல்ல அப்பா ஏசினார். உந்தச் சாத்திரத்தை நம்பினால் தொழில் செய்ய முடியாது.

எல்லோரும் வெளிக்கிட்டம். இரட்டையருக்கு அரைக் காற்சட்டை. குட்டித்தங்கச்சிக்குப் பட்டுச் சட்டை. பெரியக்கா சீலை உடுத்து அரசிபோல வந்தாள். சின்னக்கா பாவாடை தாவணி அம்மாவும் புதுச் சீலை. அப்பா சொன்னபடி 7 மணிக்கு வந்தார். எல்லோரும் வாகனத்தில் ஏறிக் கோவிலுக்கு வந்தோம். சுற்றிக் கும்பிட்டோம். எல்லாருக்கும் அப்பா கச்சான் வாங்கித்தந்தார். தம்பிமார் ஐஸ்கிறீம்!... என்று சிணுக்கினார்கள். கடற்கரைக்குப் போகவேணும்! கெதியா வாகனத்தில் ஏறுங்கோ!...

கடற்கரைக்கு வந்தபோது எங்களுக்குத் தலைகால் புரியவில்லை. வெள்ளைமணல்!... சரசரவென்று நடக்க காலுக்கு இதமாய் இருந்தது. இரட்டையரை மணலில் கிடங்கு கிண்டி கால்களைப் புதைத்து நிற்கவிட்டோம். இருவரும் கையைத் தட்டிச் சிரித்தார்கள்.

சின்ன அலை வந்துவந்துபோக அதைப் பார்த்து நானும், அக்காமாரும் கிட்டப்போய் கால் நனைய நின்றோம். அம்மா தம்பிமாருக்கு கிட்ட நின்றாள். குட்டித் தங்கச்சிக்குப் பசி வந்துட்டுது. காட்டுக் கத்தல் கத்திச்சுது. அம்மா பால் குடுக்கவேணும். சுற்றும் முற்றும் பார்த்தாள். பெரியக்காதான் சொன்னாள். அம்மா அந்த மீன்பிடி வள்ளத்துக்கை போயிருந்து பாலைக்குடு...! நானும் அம்மாவும் ஒரு வள்ளத்துக்கை போய் இருந்தது. குட்டித் தங்கச்சி அம்மாவிடம் பால்குடிக்க நான் கச்சானைக் கொறிக்கத் தொடங் கினேன்.

பெரியக்காவும், சின்னக்காவும் இன்னொரு வள்ளத்தில் ஏறி இருந்து கொண்டு பாடத் தொடங்கினார்கள்.

திடீரென ஒரு பேராசை.... நான் கடலைப் பார்த்தேன். ஒரு பெரிய அலை... அம்மா!... என நான் கத்த எண்டு வாய் திறக்குமுன்... எங்கள் வள்ளம் நீரோடு தூக்கப்பட்டது. அம்மா கத்தினாள். ஐயோ என்ரை குஞ்சுகள்!... நான் கண்ணை மூடினேன். ஒன்றும் தெரியவில்லை. மீண்டும் கண்விழித்தபோது பெரியக்காவும், சின்னக்காவும் கிழிந்த ஆடைகளோடு... அம்மாவும், குட்டித்தங்கையும், என்ரை இரட்டைத்தம்பி, அம்மா!... தம்பியவை!... நான் கேட்டேன். அம்மா பேசாமல் அழுதாள். அக்கா என்ரை தலையைத் தடவினாள். அவங்கள் கடலோடை போட்டாங்கள்! அவள் அழுதாள். என் கண்ணில் மனதில் புதைத்த அந்த உயிரோவியங்கள்... அம்மா...! அப்பா!... என் கேள்விக்கு யாரும் விடை சொல்லவில்லை. நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். எங்கும் கண்ணீருடன் மக்கள்!... நெஞ்சுக்கை என்னவோ செய்தது!... கண்கள் இருண்டன. கடலலையில் தம்பிமார் இருவரும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். நான் எழும்பி ஓட முயன்றேன். முடியவில்லை! என் நினைவில் எல்லோரும் மறைய, நான் ஆனந்தமாக கடலலையோடு போய்க்கொண்டிருந்தேன். தம்பிமார் இருவரும் என் கையைப் பற்றியபடி நடந்து வந்துகொண்டிருந்தார்கள். ஆ!... இதுதான் உண்மையான சுகம்!

மனோன்மணி சண்முகதாஸ்

# சந்தோஷத்துக்காக நேரம் ஒதுக்குங்கள்

சென்றவாரம் முறையான ஆரம்பம் பற்றிப் பார்த்தோம். காலை நேரத்தை முறையாக ஆரம்பிப்பதும், ஒரு வகையான சந்தோஷமே. அந்தச் சந்தோஷம் நாள்முழுக்க எம்மைப் புரிந்துணர்வுடன் வைத்திருக்க உதவுகிறது. அந்தப் புத்துணர்வு, நாங்கள் சந்திக்கும் ஒவ்வொருவருடனும் பகிர்ந்துகொள்ளக்கூடிய மனநிலையைத் தருகிறது.

இந்தப் புத்துணர்வு - சந்தோஷத்துடன் இந்த வாரம் இன்னொரு வழிமுறை பற்றிப் பார்ப்போம்.

**தேவையற்றதை ஒதுக்கப் பழக வேண்டும்**



வீட்டில் எத்தனையோ பொருட்கள் இருக்கின்றன. சில பொருட்களை அடிக்கடி பயன்படுத்துகிறோம். சில பொருட்களை எப்போதாவது பயன்படுத்துகிறோம். சில பொருட்களை நாம் பயன்படுத்துவதேயில்லை.

பழுதாகிப்போன பழைய பொருட்கள் என்று ஒரு சேமிப்பு வீடுகளில் இருக்கும். கதிரை முதல் நாம் உபயோகப் படுத்தும் உடைகள் அல்லது செருப்புக்கள் என்று இவை பலவகைப்பட்டதாக இருக்கும். பழுதாகிப்போன பழைய பொருட்களை அடிக்கடி தூசுதட்டிப் பாதுகாத்து வைத்து, எங்களுடைய நேரத்தை வீணாக்கு கின்றோம்.

எனவே இவ்வாறு பழையதாகிப்போய், பயன்படுத்த முடியாதநிலையில் இருந்தால், அவற்றை உடனடியாகத் துப்பரவாக்குவதில் எந்தவிதமான தயக்கமும் காட்டக்கூடாது. என்றாவது ஒருநாள் தேவையாய் இருக்கும் என்று நினைத்து, சேமித்து வைக்கத் தொடங்கினால் பிறகு அதற்கென்று ஒரு அறையை ஒதுக்கவேண்டியிருக்கும்.

மேலும், வீட்டைச் சுத்தப்படுத்த முடிவெடுத்தால், எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக்கொண்டு ஒரே நாளில் சுத்தம் செய்ய எண்ணுவோம். ஆனால், ஒரு நாளைக்கு ஒரு அறை என்று சுத்தம் செய்தால் சிரமம் தெரியாது. இவ்வாறு சுத்தம் செய்யும்போது குடும்ப உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு ஆளுக்கொரு வேலையாகச் செய்தால் களைப்புத் தெரியாது, வேலையும் உடனடியாக முடிந்துவிடும்.

செருப்பு, குடை, கைப்பை போன்றவற்றை அதற்குரிய இடத்தில் சரியாக வைக்கவேண்டும். குழந்தைகளையும் அதேபோல் பழக்கிவிட வேண்டும்.

# அரசின் அவசரகால பிரகடனத்தால் முடங்கிக்கிடக்கும் மீள் குடியேற்றம்

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை



ஜனாதிபதி சந்திரிகா தற் போது அறிவித்துள்ள அவசரகாலச் சட்டத்தால், கடற்கொந்தளிப்பின் பெருந் துயரைச் சந்தித்த முல்லைத்தீவில் - அடுத்த கட்டப் பணிகள் முடக்கப்பட்டுக் கிடக்கின்றன என்று, தமிழீழ கடற் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஒட்டுமொத்தமாக இலங்கைத் தீவகத்தில் கடற்கொந்தளிப் பன் தாக்கத்தால் உச்சப் பாதிப்புக்குள்ளான இடம் முல்லைத்தீவாகும்.

கடற்கொந்தளிப்பின்போது மிகத் துரிதமாக மீட்பு பணி மேற்கொள்ளப்பட்டதும் முல்லைத்தீவுப் பிரதேசமே.

இவற்றை உலக ஊடகங்கள் வெளியுலகுக்குத் தெரியப்படுத்தி விட்டன. இதன் விளைவாகவே சந்திரிகா இப்போது அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியுள்ளார்.

இதனால் இந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளவேண்டிய அடுத்த கட்ட வேலைகள் அனைத்தையும் அவர் முடக்கி விட்டார்.

இங்கு மீள்குடியமர்வையும் மிக வேகமாக செய்து முடிக்கத் தீர்மானித்தோம். அதாவது, பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை ஒரு வாரத்துக்குள் தற்காலிக கொட்டகைகளில் குடியமர்த்துவதற்கான இடங்களைத் தெரிவு செய்து, அங்கே குடிசைகளை அமைப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில் தான் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதனால் பாடசாலைகளை மீள இயங்க வைக்கவும் முடியவில்லை, மக்களையும் குடியமர்த்தவில்லை.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் ஊடாக பெருமளவான கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்காக - 500 லட்சம் ரூபாவை வழங்கிவிட்டு, வாகனங்களை வாடகைக்குப் பெற்று வேலை செய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

ஆனால், இங்கு கனரக வாகனங்களை வாடகைக்குப் பெறமுடியாது. ஏனெனில், அவை இங்கில்லை.

எங்களுடைய பாவனையில் உளளதைத்தான் நாங்கள் இந்த வேலைத்திட்டத்தில் ஈடுபடுத்தியுள்ளோம். அவற்றைக் கொண்டு விரைவாகச் செய்ய முடியாதுள்ளது.

கடற்கொந்தளிப்பால் ஏற்பட்டு ஏறத்தாழ 22 நாட்கள் கடந்த நிலையில், இன்றும் பல உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தீவகத்துக்கு உதவி புரிய பல நாடுகள் வந்து இறங்கியுள்ளன. பல நாடுகள் பெருந்தொகையான உதவிகளையும் வழங்கியுள்ளன.

ஆனால், எதுவும் தமிழீழப் பகுதிக்கு வந்து சேரவில்லை. இனியும் இந்த உதவிகள் எமது பகுதிக்கு வந்து சேரும் என்ற நம்பிக்கை எமக்கும், எமது மக்களுக்கும் இல்லை. இதனால் தற்காலிக கொட்டகைகளை - தென்னங்கிடுகுகளாலும், காட்டுத்தடிகளாலும் அமைத்துக் கொடுக்க முடிவெடுத்துள்ளோம் என்றும் அவர் மேலும் கூறினார்.




### தற்காலிக குடியேற்றம்

(கண்டாவளை)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட சுண்டிக்குளம் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை, கிளிநொச்சி - கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லாறுக் கிராமத்தில் தற்காலிகமாக குடியமர்த்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாட்டில் - கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர், கண்டாவளைப் பிரதேச செயலர், பிரதேச கிராம சேவையாளர்கள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

## முல்லைத்தீவு பிரதேசத்தில்

# இடைத்தங்கல் முகாம்கள் அமைப்பதில் ஈடுபடும் புலிகளின் சிறப்புச் செயலணி

சுனாமி கடற்கொந்தளிப்புக் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள முல்லைதீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து, நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கான இடைததங்கல் முகாம்களை அமைககும் பணி - விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்ட சிறபபுச் செயலணியின் திட்டமிடலின்படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவில் சுனாமியால் முற்றாக அழிவைச் சந்தித்த 13 கிராமங்களின் மக்களும் - தற்போது பாடசாலைகள், பொது நோக்கு மணடபங்கள் எனப்பல நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான இடைத்தங்கல் முகாம்களை அமைப்பதற்கான இடங்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட நிலையில், அந்த இடங்களைச் சீர்படுத்தும் செயற்பாடுகளும், சீர்செய்த இடங்களில் கொட்டகைகளை அமைக்கும் செயற்பாடுகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதன் அடிப்படையில் முல்லைத்தீவில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டத்தின்படி, முல்லைத்தீவு - கள்ளப்பாடு கிராமத்தைச் சேர்நத 360 குடும்பங்களைக் குடியமர்த்துவதற்காக, உண்ணாப்புலவு பகுதியில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

செயலணிக்குழுவினரின் திட்டமிடலின்படி அமைக்கப்பட்டு வரும் இந்தக் கொட்டகைகளில் குடியமர்த்தப்படும் மக்களின் அத்தியாவசிய செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் முகமாக கழிப்பறைகள், குளியல் அறைகள் என்பனவும் அமைக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கொட்டகைக்கும் மின் விளக்குகளைப் பொருத்தும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அத்தோடு பொது நோக்கு மண்டபம், முன்பள்ளி என்பனவும் அமைக்கப்பட்டு வருகின்றன.

கொட்டகைகளை அமைப்பதற்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ள நிலையில், உண்ணாப்புலவு தவிர்ந்த ஏனைய இடங்களில் கொட்டகைகள் அமைப்பதற்கான செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையிலேயே காணப்படுகிறது.

இதேவேளை, வட்டுவாகல் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களைத் துப்புரவு செய்யும் பணியில் மக்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**ஜனவரி - 21**

1506 :- உலகிலுள்ள மிகப்பழைய படையணியானவார்டிகனிலுள்ள போண்டி ஃபிகல் ஸ்விஸ்கார்ட் என்ற படையணி இன்றுதான் முதன் முதல் அமைக்கப்பட்டது.

1924 :- சோவியர் புரட்சிக்கு தலைமை வகித்தவரும், உலகில் முதலாவது சோசலிச அரசை நிறுவியவருமான தத்துவஞானி லெனன் நினைவுநாள் இன்றாகும்.

1954 :- அணுசக்தியால் இயங்கும் நாட்டிலஸ் என்ற நீர்மூழ்கிக் கப்பலை முதன்முதலாக இன்றுதான் அமெரிக்காவெள்ளோட்டம் விட்டது.

1976 :- ஒலியைவிட வேகமாகச் செல்லக்கூடிய கொன்கார்ட் ரக விமானம் இன்றுதான் முதன் முதலாக பயணிகளை ஏற்றிக் கொண்டு தனது பறப்பை மேற்கொண்டது.

1992 :- வடகொரியாவும், தென்கொரியாவும் அணு ஆயுதத்தடை ஒப்பந்தததில் இன்று ஒப்பமிட்டன. கொரிய குடாநாட்டில அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்வதைத் தடுப்பதற்கு இந்த உடன் படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2004 :- வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொங்குதமிழ் நிகழ்வு எழுச்சியுடன் நடைபெற்ற நாள் இன்றாகும்.

தொகுப்பு - சந்துரு

# அஜித் போயோ கொடவும் நிவாரணம் கொண்டு வந்தார்



(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்ட 'சாகரவர்த்தன' கப்பலின் முன்னாள் கப்டன் போயோகொட மற்றும் சிலிங்கோ நிறுவனத்தின் தலைவர் லலித் கொத்தலாவல ஆகியோரின் சார்பில் - பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப பட்டுள்ளன.

இவர்கள் இருவரின் சார்பில் கப்டன் போயோகொட இந்தப் பொருட்களை கிளிநொச்சியில் தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கனிடம் கையளித்தார்.

காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கத் தலைவர் ஈ.என்நாணயக்காரவும் கப்டன் போயோகொடவுடன் வருகை தந்திருந்தார்.

இவர்கள் தங்களுடன் தமிழ் மக்களுக்காகக் கொண்டு வந்த ஐந்து உழவு இயந்திரங்களையும் படையினர் அனுமதிக்கவில்லை.

இந்த இயந்திரங்கள் வவுனியாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தாங்கள் கைதாகி தங்கியிருந்த காலத்தில் - விடுதலைப் புலிகள் தங்களிடம் காட்டிய மனிதாபிமானம், மனிதநேயம், உயர் பண்பு போன்றவற்றை மதித்தே, இந்தக் கடற்கொந்தளிப்பால் துன்பப்படும் மக்களைப் பாதுகாக்க அவர்களுக்கு தமது உதவிக்கரத்தை நீட்ட விரும்பினோம் என்று போயோகொட தெரிவித்தார்.

## உளவள ஆற்றுகை

(முல்லைத்தீவு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களின் உளவளங்களை தேற்றும் வகையில் முல்லைத்தீவு கல்வி வலயத்தினரால் எதிர்வரும் 26 ஆம் திகதி 'எச்சத்திலும் எழுவோம்' என்னும் தலைப்பில் மாபெரும் ஆற்றுப்படுத்தல் நிகழ்வு முல்லைத்தீவு நகரில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த ஆற்றுப்படுத்தல் நிகழ்வு எஞ்சிய உறவுகளின் உள்ளங்களைத் தேற்றுதல், எச்ச வளங்களை மீளப் பயன்படுத்தல், வீரம் விளைந்த மண்ணை வாழ்வாங்கு வாழவைத்தல் என்ற உள்ளடக்கங்கள் ஊடாகவே முன்னெடுக்கப்படவுள்ளன.

# சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு உளவளத்துணை செயற்பாடுகள்

(கிளிநொச்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளவளத்துணை செயற்பாடுகள் - தமிழர் தாயகம் எங்கும் முழுமூச்சுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என, உளவளத்துணை செயற்பாட்டுக்கான இணைப்பாளர் அருட்தந்தை கருணாரத்தினம் அடிகளார் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவளத்துணை செயற்பாடுகள் தொடர்பாக, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுனாமி கடற்கொந்தளிப்பு ஏற்பட்ட பின்பு, ஏனைய நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை ஆரம்பித்தது முதல் நாமும் இந்த உளவளத்துணை செயற்பாட்டை ஆரம்பித்தோம்.

அன்னை இல்லம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் ஏனைய சில அமைப்புக்களின் தொண்டர்களை, இந்தச் செயற்பாட்டுக்கு நாம் முழுமையாகப் பயன்படுத்தியுள்ளோம்.

தமிழர் தாயகம் எங்கும் இந்தச் செயற்பாடு - முழுமூச்சுடன் மேற கொள்ளப்பட்டு வருகிறது. இந்தச் செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# வடமராட்சி கிழக்கு கூட்டுறவுச் சங்கத்தால் உலர் உணவுப் பொருட்கள் விநியோகம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவு சங்கம் - ஆடி மாதத்துக்குரிய உலர் உணவு நிவாரணத்தை வழங்கி வருகிறது.

சுனாமி கடற்கொந்தளிப்பால் முற்றாக அழிவுக்குள்ளான மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உலர் உணவு பெற்ற மக்கள் - தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் செம்பியன் பற்று தெற்கு, மருதங்கேணி தெற்கு கிளைக் கடைகளில் உலர் உணவு நிவாரணப் பொருட்களைப் பெறுவதற்காக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(21)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்*
*கலம்தீமை யால்திரிந் தற்று.*

*திருக்குறள்*

## நமது நோக்கு

### 'சுனாமி'யின் தாக்கமும் அரசியல் குழப்பங்களும்!

கடந்த டிசெம்பர் 20 ஆம் திகதி எவருமே எதிர்பார்த்திராத பேரழிவை ஏற்படுத்தி மாபெரும் மனித அவலத்திற்கு காரணமாகி மௌனித்துப் போய்விட்ட சுனாமிப் பேரலையின் தாக்கம் இந்த நாட்டின் சகல மட்டங்களிலும், கட்டமைப்புக்களிலும் அழுத்தமாக பதிவுசெய்துவிட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளின் எதிரொலிகள் இப்போது தான் மெல்ல மெல்லத் தெரியவரத் தொடங்கியுள்ளது.

மக்கள் மத்தியில் எல்லோரையுமே அதிர்ச்சிக்கும், அவலத்திற்கும், இழப்புக்கும், இன்னலுக்கும் ஆளாக்கிவிட்ட சுனாமி அலையின் சீற்றம் வெறுமனே சில மணித்துளிகள்தான் நீடித்ததென்றாலும் அதன் தாக்கம் பல வருடங்களுக்கு அதே மக்களின் வாழ்வில் பின் விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என்பது உண்மையே ஆகும்.

குறிப்பாக சுனாமி சில விடையங்களை எமக்குத் தெளிவாக இனங்காட்டியுள்ளதுடன் பல சமூக அரசியல் மாற்றங்களுக்கும் காரணமாகியுள்ளதென்று இன்று இலங்கையில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளும் நிரூபித்தே வருகின்றன.

இன்று இலங்கையின் அரசியலில் சுனாமி ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவுகள் ஆட்சிப்பீடத்தில் பெருத்த ஓசையுடன் எதிரொலிக் ஆரம்பித்துவிட்டதென்றால் மிகையில்லை. சுனாமியால் ஏற்பட்ட அனர்த்த அவலங்களைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் காணும் மூலோபாயத்துடன் வியூகம் அமைக்கும் நகர்வுகளை மேற்கொண்ட அரசு அந்த வியூகத்துள் தானே சிக்கிக்கொண்டு அல்லாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

சுனாமியால் ஆதாயம் பெறத்துடித்த ஜனாதிபதியை ஓரம் கட்டிவிட்டு ஜே.வி.பி தன்னை பெரியவனாக்கிக் காட்ட முயன்றதும் கடுப்பாகிவிட்ட அவர் எடுத்த சில உள்நடவடிக்கைகள் ஜே.வி.பியினரை சீற்றம் கொள்ளச் செய்து - அரசையும், ஜனாதிபதியையும் ஆட்சிக்குள் அங்கம் வகித்துக் கொண்டே எச்சரிக்கை செய்ய வைத்துள்ளமை ஜனாதிபதிக்கு எதிர்கால அரசியலில் மாற்று உபாயங்களைத் தேடவைத்துள்ளது.

ஜனாதிபதி - ஜே.வி.பி கூட்டு என்பது தனது எதிர்கால அரசியலுக்கு பெரும் அச்சுறுத்தலாகிவிட்டதை உணர்ந்த ஐ.தே.கட்சி இந்த வாய்ப்பை மிக நுட்பமாகப் பயன்படுத்தவும் சுனாமி அனர்த்தம் வழிவகுத்துக்கொடுத்துவிட்டது.

தனது தேசியவாதக் குரலை வைத்தே மீளக்கட்டியெழுப்புவோம் என்ற ஜனாதிபதியின் அழைப்புக்கு தனது முழுமையான ஆதரவை எந்தவிதமான அரசியல் நோக்கமும் இன்றி வழங்கத் தயாரென எதிர்க்கட்சித் தலைவர் பதிலிறுத்து அசரவைத்துவிட்டார். அது மட்டுமல்லாது இன்றைய நிலையில் நாட்டைக் கட்டியெழுப்புவதே எம்முன்னுள்ள முக்கிய பணி என்று கூறி ஜனாதிபதியின் கரத்தைப் பலப்படுத்த தாம் தயார் என்றும் உத்தரவாதம் அளித்து ஜே.வி.பியின் வயிற்றில் புளியையும் கரைத்துவிட்டார்.

ஜே.வி.பியினரின் மேலாதிக்கப் போக்காலும், தான்தோன்றித் தனமான நடவடிக்கைகளினாலும் அரசை ஆட்டிப் படைக்கும் அறிக்கைகளாலும் - வெறுப்பும், அதிருப்தியும் அடைந்த ஜனாதிபதி இவர்களின் அரசியல் கூட்டு சர்வதேச மட்டத்தில் தனக்கு பெரும் சிக்கல்களையும், நெருக்கடிகளையும் ஏற்படுத்தப்போகிறது என்பதையும் சமாதான முயற்சிகள் தொடர்பான விடயங்களில் அவர்களின் அதிகப்பிரசங்கித் தனத்தால் உணர்ந்திருந்த போதிலும் அவர்களை வெட்டிவிட முடியாத நிலையில் ஒரு உறவைப் பேணவேண்டிய தவிர்க்கமுடியாத சூழலுள் அவர் இழுபட வேண்டியிருந்தது.

இப்போது சுனாமி நிவாரணப் பணிகளில் அவர்கள் மூக்கை நுழைத்து தம்மைப் பலப்படுத்த முயன்ற தோரணையால், அவர்களை வெட்டிவிடவேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுவிட்டது என்றே கூறவேண்டும்.

இதனையே இந்தியா தவிர ஏனைய சர்வதேச சமூகமும் விரும்புகின்றது என்பது அவருக்குத் தெரியும். சமாதான முயற்சிகளில்கூட ஐ.தே.கட்சியின் ஆதரவைப் பெற்று தேசிய அரசொன்றை அல்லது நல்லிணக்க சபை ஒன்றை உருவாக்கி- அதனைத் தொடருமாறு சில சர்வதேச நாடுகள் ஆலோசனை சொன்னதுடன் அதற்காக இரகசியமாக முயற்சித்ததுமுண்டு.

ஆனால், அது வெற்றிபெற முடியாது போய்விட்டது. இன்றைய நிலையில் சுானமியால் உருவான மாற்றங்கள் - காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் வேண்டும் என்ற உணர்வை ஜனாதிபதிக்கு ஏற்படுத்திவிட்டுள்ளது.

ஜே.வி.பியினரின் மேலாதிக்கப் போக்கை ஒடுக்கவும், சர்வதேச உதவிகளை நிச்சயம் செய்துகொள்ளவும் தனது அரசியல் வாழ்வை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும் சுனாமி உருவாகித் தந்துள்ள இந்த வாய்ப்பை பயன்படுத்தி எதிர்க்கட்சியின் தேசிய நலனின் அடிப்படையிலான ஆதரவை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்று அவருக்கு உணர்த்தியுள்ளது.

எனவே, தந்திரோபாய ரீதியில் என்றாலும் ஐ.தே.கவுடன் உறவை வைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கு ஐரோப்பிய - அமெரிக்க மற்றும் ஏனைய மேற்குலக சமூகம் ஆதரவளிக்கும் என்பதும் அவருக்குத் தெரியும்.

தூரநோக்குடனான அரசியல் அனுகூலங்களுக்கு இந்த நகர்வு தவிர்க்கவே முடியாதது என்பதால் ஜனாதிபதி - எதிர் கட்சித் தலைவருடனான அண்மைய சந்திப்புக்களின்போது, சில இணக்கப்பாடுகளுக்கு வந்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

இதனையடுத்தே ஜே.வி.பியின் தலைமறைவுத் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஜனாதிபதியை எச்சரித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. என்னதான் இருந்தாலும் ஜனாதிபதிக்கும்- ஜே.வி.பிக்கும் இடையிலான உறவு சந்தர்ப்பவாத அடிப்படையிலான உறவே ஆகும். ஓடும் புளியம்பழமும் போன்று ஒட்டியும் ஒட்டாத உறவு.

அதேவேளை ஐ.தே.கவுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொது எதிரியும் ஜே.வி.பி.யேயாகும். இப்போது அவர்கள் சுனாமி தந்த பரிசாக பொது எதிரிக்கு எதிராக ஒன்றுபட்டு செயற்படவேண்டியும் இருக்கலாம்.

எப்படியானாலும் இலங்கை அரசியலின் உள்ளக முரண்பாடுகள் சுனாமி பேரலையை விடவும் தாக்கமான விளைவுகளை அடுத்துவரும் வாரங்களில் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# கொலை, கொள்ளைகளிலிருந்து விடுபட்ட பகுதி எது? விடுபடாதது எது?

தமிழர் தாயகப்பகுதியில் சிறிலங்காப் படைகள் ஆக்கிரமித்துள்ள பகுதிகள் 'விடுவிக்கப்பட்ட' பகுதியாகவும், மக்கள் அச்சமின்றிப் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் வாழும் பகுதிகள் 'விடுவிக்கப்படாத' பகுதிகளாகவும் அரசினாலும் படைகளாலும் அடையாளப் படுத்தப்படுகின்றன.

தமிழர் தாயகத்தில் வாழும் மக்களைப் பொறுத்த வரையில், சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ள பகுதிகளே டுவிக்கப்படாத' பகுதிகளாகக் காட்சியளிக்கின்றன..

கொலைகள், கொள்ளைகள் மலிந்த பகுதிகளாக படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளே விளங்குவதால், இவற்றிலிருந்து, விடுபடாத பகுதிகளே அந்தப் பகுதி என்பது தமிழ் மக்களின் நியாயமான கருத்தாகும்.

நாளும் பொழுதும் அரசபடைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறும் கொலைகளும், கொள்ளைகளும் ஊடகங்களில் வெளிவரும் செய்திகளாக இருக்கின்றன.

இப்படி எல்லாச் செய்திகளுமே ஊடகங்களில் வெளிவருவதும் இல்லை. யாழ்ப்பாண நகரில் சிறிலங்கா படைகள் மூலைக்கு மூலை முகாம்களை அமைத்து நோட்டம் விடுக்கொண்டிருக்கும் பகுதியில் நடந்த ஒரு சம்பவம் பற்றி எனது நண்பன் சொன்ன தகவல் இது.

மூன்று நான்கு தினங்களுக்கு முன் நடந்த சம்பவம் இது.

ஊடகங்களுடன் நெருங்கிய தொடர்புடைய அன்பர் இவர். ஊடகம் ஒன்றில் யாழ்ப்பாணத்தில் வேலை பார்த்த இவர், ஊடகங்களுக்கு விளம்பரம் சேகரிப்பவராகவும் பணியாற்றிவந்தார். நகரில் மட்டுமல்லாது நாட்டின் முக்கிய நகரங்களிலுள்ள தொழில் அதிபர்களுடனும் வர்த்தகர்களுடனும் இவருக்கு நெருங்கிய உறவும் தொடர்பும் ஏற்பட்டது.

பின்னர் இவர் தனியாகவே அச்சகம் ஒன்றைத் தொடங்கினார். அத்துடன், தனியார் விளம்பர சேவையொன்றையும் அவர் ஆரம்பித்தார்.

தொழில் அதிபர்கள், வர்த்தகர்கள் மட்டுமல்லாது சகலதரப்பு மக்களுடனும் அன்பாகப்பழகும் பண்புள்ள இவருடன் - பலரும் நட்பும், உறவும் கொண்டிருந்தனர். தனது கடும் உழைப்பினாலும், திறமையாலும் முன்னேறியவர் இந்த அன்பர்.

சில தினங்களுக்கு முன் மாலையில், மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் ஊடகங்களுக்கு ஒரு முக்கிய விளம்பரம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்.

"அதற்கென்ன நன்றாகக் கொடுக்கலாம். வானொலியிலா, பத்திரிகையிலா, தொலைக்காட்சியிலா... எதில் கொடுக்கவேண்டும், எப்படிக் கொடுக்கவேண்டும்" என்று இவர் கேட்டிருக்கிறார்.

"பெரிய விளம்பரம் போடவேண்டும். வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் உறவினர் ஒருவரே இந்த விளம்பரத்தை போடவேண்டும் என்று சொல்கிறார். இதன் விபரமெல்லாம் அவர் உங்களிடம் நேரில் சொல்லவேண்டும் என்பதற்காக உங்களை நேரில் கூட்டிக்கொண்டு வரச் சொல்லியிருக்கிறார். நீங்கள் இப்பவே என்னுடன் வந்தால் அவருடன் கதைத்து எல்லாவற்றையும் முடிவு செய்யலாம்" என்று வந்தவர் சொல்லியிருக்கிறார்.

வந்தவர் பேசிய பேச்சிலிருந்தும், அவரைப் பார்த்ததிலிருந்தும் எந்தவித சந்தேகமும் அன்பருக்கு ஏற்படவில்லை. அவருடன் கூடவே அவரது மோட்டார் சைக்கிளில் ஏறிச்சென்றார்.

மோட்டார் சைக்கிள் நகரின் எல்லையைத் தாண்டவும், "எங்கே போகிறோம்?" என்று இவர் கேட்க, "அவரைச் சந்திக்கத்தான் போகிறோம் பேசாமலிருங்க" என்று சொல்லி பலாலி வீதியால் வாகனத்தைச் செலுத்தினார்.

சிறிது தூரம் போனதும், மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத பகுதியில் நின்ற ஒருவரையும் அவர் தமது வாகனத்தில் ஏற்றினார். அன்பருக்கு இப்போதுதான் சிறு சந்தேகம் தொட்டது. இனியென்ன செய்வது?

உரும்பிராயில் ஆட்கள் நடமாட்டமில்லாத இடத்தில் வண்டி நின்றதும், இருவரும் இறங்கி அவருடைய ஒரு கையை ஒருவர் பிடிக்க, மற்றவர் அவர் அணிந்திருந்த சட்டையைக் கழற்ற முற்பட்டார். அவர் கழுத்தில் அணிந்திருந்த மொத்தச் சங்கிலி, சங்கிலியில் கோர்த்திருந்த பெரிய பதக்கம், மணிக்கட்டில் அணிந்திருந்த சங்கிலி, கைக்கடிகாரம் என்று அனைத்தையும் இருவரும் பிடுங்கிக் கொண்டனர்.

இவற்றின் பின் ஏதேதோவெல்லாம் பேசிக்கொண்டே அவரை நிலத்தில் தள்ளி வீழ்த்திவிட்டுப் போய்விட்டனர்.

திகைத்துப் போன அவர் எதுவும் செய்யமுடியாத நிலையில் சிறிது தூரம் நடந்து ஓட்டோ ஒன்றைப் பிடித்து வீடு திரும்பியிருக்கிறார்.

இதன்பின் யாழ். பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இந்த அன்பர் இரண்டு தினங்கள் அங்கு தங்கிச் சிகிச்சை பெற்றபின் வீடு திரும்பியிருக்கிறார்.

"இவர் ஆலயங்களுக்குச் செல்லும்போது, 'ஆண்கள் மேலாடைகளைக் கழற்றிவிட்டு உள்ளே செல்லவும்' என்ற அறிவிப்புப்படி சென்றிருப்பார். இவர் அணிந்திருந்த ஆபரணங்களை ஆலயத்துக்கு வருபவர்களில் ஒரு 'அடியான்' நோட்டம் விட்டிருப்பான்" என்றேன் நான்.

"ஆலயத்துக்குள்ளேயே களவெடுக்கக் கூடியவர்கள் மலிந்துள்ள இந்தக் காலத்தில் மனிதரிடமுள்ள நகைகளை விட்டுவைப்பார்களா?" என்று சொன்ன நண்பன் "இப்போது பவுண் விற்கும் விலையில் அன்பரிடமிருந்து அபகரித்த நகைகள் இலட்சம் இருக்கலாம்" என்றான்.

"பவுணுக்கு ஒன்பதாயிரம், பத்தாயிரம் என்று அடகுக்குக் கொடுக்கத் தயாராக இருப்பதாக அடகு கடைகளிலும் வங்கிகளிலும் அறிவித்தல்கள் தொங்குகின்றன என்றால், பவுண் விலை பற்றிச் சொல்லவா வேண்டும்" என்று கேட்டேன்.

"பவுண் விலை அதிகரித்துக் கொண்டு போகையில் நகைகள் அணிவதையும் கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும்" என்று நண்பன் சொன்னான்.

"களவு, கொள்ளைகளைத் தடுப்பதற்கு வழி காண்பதை விட, நகைகள் அணியாமல் தடுப்பதுதான் புத்திசாலித்தனம்" என்றும் அவன் சொன்னான்.

"நம்ம நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றிப் பாதுகாக்கும் காவல்துறையினர் மீதும், பாதுகாப்புப் படையினர் மீதும் உமக்கு இவ்வளவு நம்பிக்கையா?" என்று கேட்டேன்.

"சடடத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கும் பொறுப்பற்றவர்கள் சிலரின் நடத்தை பற்றி ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் அந்த நம்பிக்கையை இல்லாமல் செய்துவிடுகின்றன" என்றான் நண்பன்.

"சுனாமிப் பேரலைகளில் அகப்பட்டு உயிரிழந்தவர்களிடமிருந்தும் உயிருக்குப் போராடியவர்களிடமிருந்தும் நகைகளையும் அபகரித்தவர்கள் பற்றிய செய்திகளை நீர் பார்க்கவில்லையா?" என்றேன்


"பார்த்தேன் இவையெல்லாம் தென்பகுதியில்தான் அதிகம். உயிர் தப்பிய ஒருவரிடம் நகையை அபகரித்தவர்கள் அவரை மீண்டும் நீரில் ஆழ்த்திய செய்திகளையும் அறிந்தேன்" என்றான் நண்பன்.

"இந்தக் கொள்ளைகள் எல்லாம் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்தில் கிடையாது. மணவிழாக்களுக்கும் ஆலயத் திருவிழாக்களுக்கும், மக்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் - நகைகள் நிறையவே அணிந்துதான் பெண்களும் ஆண்களும் இன்றும் போய் வருகிறார்கள்" என்றும் நண்பன் சொன்னான்.

"எது 'விடுவிக்கப்பட்ட பகுதி' என்பதை நீரே சொல்லும்" என்று சொல்லிக் கொண்டே நடந்தான் நண்பன் என்றாலும் இச்சம்பவம் மக்களுக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும் ஊர்மக்களும் கொஞ்சம் விழிப்புடனிருப்பது நல்லது என்றேன் நான்.

அரசியல்...

லோஜினி



# சுனாமியால் கூட மாற்ற முடியாத பேரினவாத சக்திகளின் சுயரூபம்

தென்கிழக்காசியாவில் கடந்த மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இந்தோனேஷியா முதலிடத்திலும், இலங்கை இரண்டாவது இடத்திலும் உள்ளன.

இந்த வகையில் இலங்கையில் ஏற பட்ட பேழிவுகளுக்கான புனரமைப் புத் தட்டங்களுக்கு உதவிவழங்கும் வகையில், இந்த அனர்த்தங்களைப் பார்வையிட்டு திட்டங்களை மதிப்பீடு செய்வதற்காக ஐ.நா.செயலர் கொபி அனான், உலகவங்கிததலைவர் ஜேம ஸ்வூல் பென்சன் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களச் செயலர் கொலின் பவல் உட்பட பல்வேறு உலக நாட்டுத்தலைவர்கள் வந்து சென்றுள் ளனர. மற்றும் பலர் வந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு இயற்கை அழிவால் பாதிப்படைந்த இலங்கையை மீளக் கட்டியெழுப்ப உலகம் முயன்று கொணடிருக்கையில், இலங்கையின் ஜனாதிபதி மற்றும் தென்னிலங்கையின் ஊடகங்கள், அரச திணைக்களங்களில் பணிபுரிவோர் போன்றவர்கள் பேரினவாதக் கருத்துகளை வெளியிட்டு வருகின்றமைதான் வேதனையளிக்கும் விடயமாக உள்ளது.

சுனாமி பேரனர்த்தம் நிகழ்ந்த பினனர் இந்த அனர்த்தத்துக்கு உதவி வழங்குமாறு கொழும்பிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்தப்பில், ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த கருத்தானது அவர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி கேட்பதற்காக இந்தச் சநதிப்பை நடத்தாமல், கடற்புலிகளின் இழப்புத் தொடர்பாக, கலந்துரையாடலை நடத்தியுள்ளார் எனறே எண்ணத் தோன்றுகின்றது.

அதாவது சுனாமி அனர்த்தத்தால் கடற்புலிகளுக்கு பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் புலிகளால் யுத்தமொன்றை ஆரம்பிக்க முடியாதெனவும் கூறியுள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்கான இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி ஏன் இந்தக் கருத்தை முக்கியப்படுத்திக் கூறவேண்டும். கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை சுனாமி அனர்த்தத்தால தமது தரப்பில் 15 பேராளிகளே சாவடைந்ததாகவும், உடைமைகள் இழப்பென்பது சிலவே எனத்தெரிவித்திருந்தும் , ஜனாதிபதி புலிகள் தொடர்பாக தனது தேவையற்ற கருத்தை முன்வைத்த இடமும், காலமும் அவர் புலிகள் தொடர்பாக தனது நிலைப்பாட்டில் மாற்றம் எதனையும் கொண்டிருக்கவிலலையென்பதையும் தனது பேரினவாத கருத்தின் மூலம் மீண்டுமொரு முறை நிரூபித்துள்ளார்.

இவற்றைவிட இலங்கையில் சுனாமி அனர்த்தத்தால் கிழக்கில் - அம்பாறை, வடக்கில் - முல்லைத்தீவு என்பன பாரிய அனர்த்தத்துக்குள்ளாகியுள்ளமை உயிரிழந்த, காணாமற்போன மற்றும் சொத்தழிவு போன்றவற்றால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட ஐ.நா.செயலர் இலங்கை வந்தபோது, அவரை இந்தப் பகுதிக்கு வர விடாமல் தடுத்ததுடன்,நொண்டிச் சாட்டாக பாதுகாப்பின்மையை காரணமாகவும் அரச தரப்பு காட்டியது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வநது சென்ற எந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் அவர்கள் தகுந்த பாதுகாப்பை அளித்து, சிறப்பாக வழியனுப்பி வைத்தமை கடந்த காலங்களில் ஏன் தற்போதும்கூட நடைபெற்றுக் கொண்டு தானிருக்கிறது.

ஆனால் ஐ.நா செயலர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல மட்டும் பாதுகாப்பில்லையென அரசு கூறியமை - தமிழ் மக்களின் பிரதேசத்துக்குள், உயர் அதிகாரி ஒருவரை செல்ல விடாமல் அரசு எவ்வாறு நயவஞ் சகமான முறையில் செயற்பட்டுள்ள தென்பதை மிகவும் வெளிப்படையாகவே எடுத்துக் காட்டியுள்ளது.

இதன் மூலம் தமிழ் மக்களதும், அவர்களது ஏகப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளது கோபத்துக்கும், சீற்றத்துக்கும் மீண்டுமொரு முறை அரசாங்கம் ஆளாகியுள்ளதென்பது வெளிப்படை.

இது இவ்வாறிருக்க - கூட்டுப் படைத் தளபதியும், கடற்படைத் தளபதியுமான வைஸ அட்மிரல் தயாசந்தகிரி விடுதலைப் புலிகளின் தலைவரும், மற்றும் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமென இருவரும் சுனாமி அலையால் உயிரிழந்து அல்லது காணாமற்போயுள்ளதாக ஒரு அண்டப்புளுகை கடந்த வார ஞாயிறு திவயின பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

சுனாமி பேரனர்த்தம் ஏற்பட்ட இரணடொரு தினங்களில் தமிழீழத் தேசியத் தலைவர் தனது கையொப்பமிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கான தனது இரங்கலை சகல ஊடகங்களுக்கும் அனுபபி, அது சகல பத்திரிகைகள் வாயிலாக வெளிவந்ததை தயாசந்தகிரி அறியவில்லையா.

பொறுப்பு வாய்ந்த பதவியிலுள்ள ஒருவர் இவ்வாறு கோமாளித்தனமாக அறிக்கைகளை வெளியிடுவது அவரது பதவிக்கு நல்லதல்ல என்பதை அவர் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். இந்த வகையில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்த கருத்து இவர்களுக்கு சாலப்பொருத்தமாக அமையும்.

அதாவது தென்னிலங்கையில் தேவையற்ற வகையில் தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்கு தலைவர் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமிலலை என்பதே அதுவாகும்.

இதனுடன் தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் 'லக்பிம" பத்திரிகை கடந்த ஞாயிறு வாரப்பதிப்பில் ரவீந்திர பெரேரா எனபவரால் எழுதப்பட்ட கட்டுரையை வெளியிட்டிருந்தது. அதில் புலிகளின் தலைவரின் மல்லாவி வீடு சுனாமியால் முற்றாக அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. முதலில் ஒரு விடயத்தைச் சொல்ல வரும்போது, அதனைக் கூற வருபவருக்கு அது தொடர்பாக பின்புல அறிவென்பது இருக்க வேண்டும்.

இந்த வகையில் ரவீந்திர பெரேரா மலலாவி குறித்து எழுதும் போது மல்லாவியின் புவிசார் அமைப்பை விளங்கிக் கொணடிருக்க வேண்டும். மல்லாவிக்கு சற்றுத் தொலைவிலுள்ள வவுனிக்குளம் வான் பாய்ந்தபோதே மல்லாவிக்கு பாதிப்பெதுவும் வராதநிலையில் எங்கேயோ உள்ள கடல் அலைகளாலா மல்லாவி அழிய போகிறது?

இந்தக் கட்டுரை தொடர்பாக அதே பத்திரிகையின் செய்தியாளர் ஒருவருடன் நான் கதைத்த போது - தனக்கே இந்தக் கட்டுரையைப் பார்த்து சிரிப்பு வந்துவிட்டதாகவும், கட்டுரையை எழுதிய ரவீந்திர பெரோராவிற்கு நில அமைப்புத் தொடர்பாக எதுவும் தெரியாதெனவும் அவர் கூறினார்.

உண்மையிலேயே ஊடகங்கள் என்பது மக்களுக்கான தகவல்களை வழங்கும் போது அவை சரியான முறையிலேயே அமையவேண்டும். இந்த ரவீந்திர பெரேரா தனது கட்டுரையின் மூலம் மக்களையும், தன்னையும் மடையர்களாக ஆக்கியுள்ளார் என்பதனையே அவரது இந்தப் பேரினவாத கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.

என்னதான் பாதிப்புக்கள் நாடு முழுவதிலும் ஏற்பட்டாலும், தமிழரும், புலிகளும் அழிந்து போக வேண்டுமென் பதில் பேரினவாதிகள் குறியாக உள்ளன ரென்பதும், அவர்களது செயற்பாடுகள் சுனாமி பேரழிவின் பின்னரும் கூட மாறவில்லையென்பதும் அவர்களது செயற்பாடுகள் மூலம் எமக்கு தெட்டத் தெளிவாகவே தெரிகின்றது.

எனவே எமது உரிமைகளை அவரகள் தருவார்கள் என்றும் நாம் சமரசமாக அவர்களுடன் வாழ எம்மை அவரகள் அனுமதிப்பார்கள் என்றும் எம்மில் பலர் இன்னமும் நம்பிக்கை கொண்டிருந்தால், எம்மில் உள்ளவர்களும், அறியாமை எனும் இருளில் மூழ்கிக் கிடப்பவர்களாகவே இருப்பர் என்பதனைத்தவிர வேறு எதைச் சொலல?

பகுதி XIV

சங்கர்



# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் போது ஒரு கடையில் நிறைய அலுமாரிகள் அடுக்கிவைக்கப் பட்டிருந்தன. அனைத்துமே இந்த அனர்த்தத்தால் சிக்கி 'ஓட்டை ஒடிசல்" கணக்குக்குள் வந்துவிட்டன. இத்தனை அலுமாரிகளுக்குள்ளும் மொத்தமாக எவ்வளவு பணம், நகைகள், சட்டைகள், ஆவணங்கள் இருந்திருக்கும்? ஒவ்வொரு வீட்டிலும் பொக்கிசங்களாகத் திகழ்ந்தவை கிலோக் கணக்கில் நிறுக்கப்படுவதற்காக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, செல்லும் பாதையில் பெரிய கல்லாறு, மற்றும் கோட்டைக்கல்லாறு இரண்டுமே தனித்தனித் தீவுகளாக உடைக்கப்பட்டிருந்தன. இரண்டு இடங்களிலும் தோணிகளின் துணையுடன் எமது மோட்டார் சைக்கிள் - நீரைக் கடந்து, இதைவிட குருக்கள் மடம் - அம்பிளாந்துறை போக்குவரத்துக்குப் பயன்பட்ட பாதையை பயன்படுத்தி சிறிய வாகனங்களும் ஆட்களும் பயணித்துக் கொண்டிருந்தனர்.

கோட்டைக் கல்லாற்றில் பெரிய மருத மரம் வேருடன் பிடுங் கப்பட்டு நீரில் இழுத்துச் செல்லப் பட்டிருந்தது. இந்த மரம் 1978 ஆம் ஆண்டு சூறாவளிக்குகூட அசையாத மரம்.

தற்போதைய அனர்த்தத்தில்சுமார் நூறு யார் தூரம் வேருடன் பிடுங்கப்பட்டுப் போயிருந்தது. பாலத்துடன் வந்து சேரும் விதமாக அமைந்திருந்த உள்ளூரைச் சுற்றிவரும் வீதி துண்டாடப்பட்டுக் கிடந்தது. நீணட ஒரு பெரியகுடா காணப பட்டது.

★ ★ ★

கோட்டைக் கல்லாறைச் சேர்ந்த இந்திரா என்னும் யுவதியைச் சந்தித்து சுனாமியின் பின்னான நிலவரம் பற்றிக் கேட்டேன். அதற்கு அவர் 'இப்ப மனுச ரெல்லாம் விசர் நாயிட நிலையில இருக்கம். விசர்நாய்க்கு தண்ணியக் கண்டாப் பயம். எங்கட நிலையும் 'இப்ப அப்படித் தான்"அன்றைய காட்சியை நினைவுபடுத்தி அவர் கூறிய வார்த்தைகள் சத்தியமானவை தான். 'தண்ணி" என்ற சொல்லே ஒரு கிலியை ஏற்படுத்தும் பதமாக மாறிவிட்டது.

ஒரு இடம் பெயர்ந்தோரின் முகாமில் குடிநீர் விநியோகத்துக்காக குடிநீர் தாங்கி (பவுசர்) சென்ற போது 'தண்ணி வருகுது" என்று ஒருவர் சொல்லவும், அதைக் கேட்டோர் பதறியடித்து ஓட முனைந்ததாகவும் சந்திராவின் அண்ணாவான அண்ணாத்துரை என்பவர் கூறினார்.

இந்த அண்ணாத்துரை மீட்புப் பணிகளில், அந்தப் பகுதி இளைஞர்களைத் திரட்டி பெரும் பங்காற்றியவர். அவர் சில விடயங்களைக் கூறினார்.

'இந்த சுனாமி பெரிய பெரிய மரங்கள முறிச்சிருந் தாக்கூட ஒரு தாயிட்ட இருந்து ஒரு குழந்தயப் பிரிக்கிற அளவுக்கு சுனாமியிட பலம் இருக் கேல்ல... ஒரு தாய் வந்து புள்ளய கட்டிப் புடிச்சுக் கொண்டே இருந்திரிக்காவு.

> இப்ப மனுசரெல்லாம் விசர் நாயிட நிலையில இருக்கம். விசர்நாய்க்கு தண்ணியக் கண்டால் பயம் எங்கட நிலையும் இப்ப அப்படித்தான்

சுனாமி பெரிய மரங்களை முறிச்சு... பாலத்தை உடைச்சு... றோட்ட உடைச்சிருக்கு... ஆனா ஒரு தாயிட கையில இருந்த புள்ளய தாயிட்ட இருந்து பிரிக்கே லாமப் போயித்து. தாய்மையிட சக்தியவிட சுனாமியிட சக்தி சின்னன்தான்.

இன்னொண்டு! சுனாமியிட அழிவுத் தாக்கத்துக்குப் பிறகு மக்களின்ட மனநிலையில ஏற்பட்ட அதிர்வுகள் மிச்சம் பெரிசா பெரிய மாற்றம் முந்தி பிரிஞ்சிருந்த கன உறவுகள் சுனாமி ஒற்றுமையாக்கியிருக்கு. இனி கடைசிவாழ்க்கையெண்ட நிலையில உறவாயிருக்காங்க. ஒவ்வொருவர் மனதின்ட அடி ஆழத்தில இருந்த பாசம் பீறிட்டு எழுந்திருக்கு. இந்தப் புதிய நிலை தற்காலிகமா போயிடக் கூடாது.

அதவிட சிங்கள மக்களின்ட மனநிலையில் ஏற்பட்ட மாற்றம் என்னெண்டு சொன்னா.... ரீ.வியில அம்பாறையில ஏற்பட்ட அழிவுகளைக் காட்டின பிறகு .... துறைநீலாவணையில இருந்து கோட்டைக்கல்லாறு வரை மூன்று கிலோ மீற்றர் தூரம் தலயில சாப்பாடு சுமந்து வந்து குடுத்துதுகள்.

அதாவது வந்த இந்த சிங்கள மக்கள் இருபத்திரண்டு கிலோ மீற்றரில உள்ள துறைநீலாவணைக்கு வந்து தலைச் சுமையா சோத்துப் பார்சல், பாண், எணடு கொண்டு வந்து தந்தார்கள்.

அந்தளவுக்கு ரீ.வியில காட்டின நிகழ்ச்சிகள் சிங்கள மக்கள் மன திில அதிர்வுகளை உணடாக்கியிருக்கு.

குறிப்பா எனக்குத் தெரிஞ்ச ஒரு படைஅதிகாரி என்கிட்டச் சொன்னார் -இனிமே சண்டை வந்தா நான்தான் முதல் ஆயுதத்த தூக்கிப் போட்டு ஓடுவன் எண்டு, அப்படியும் ஒரு மாற்றம் சில ஆக்களிட்ட இருக்கு.

பிக்குமாரும் கோயிலுகளுக்குள் வந்து சாப்பாடு குடுத்தவ. ஒரு பிக்கு வெத்தில கொண்டு வந்து வெத்தில போடுகிற ஆக்கள, தேடி ஒவ்வொரு வெத்திலயா மடிச்சுக் குடுத்தவரு.

மற்றது சின்னப் பிள்ளைகள் உளவியலா பாதிக்கப் பட்டிருக்கு. தண்ணீ யெண்டாப் பயம். அப்படி நிலைமை இருக்கு"

தொடரும்...

## இந்தியாவின் திரிசூல் ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிப்பு

(பாலார்)

முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட, தரையிருந்து விண்ணில் உள்ள இலக்கை நோக்கிச் சென்று தாக்கும் குறுகிய தூர "திரிசூல்" ஏவுகணை நேற்றுமுன்தினம் இந்தியாவில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

ஒரிசா மாநிலம் பாலாரிலிருந்து 15 கி.மீ. தொலைவில் கடலில் இருக்கும் சண்டிப்பூரில், "ஐ.டி.ஆர்.' என்றழைக்கப்படும் ஒருங்கிணைந்த ஏவுகணைப் பயிற்சி மையம் உள்ளது. இங்கு அமைக்கப்பட்டிருக்கும் ஏவுகணைத் தளத்தில் நேற்று முன்தினம் நண்பகல் 12.53 மணியளவில் குறுகிய தூர 'திரிசூல்' ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. தரையிலிருந்து விண்ணில் உள்ள இலக்கை நோக்கிப் பாய்ந்து சென்று தாக்கும் வல்லமை பெற்ற இந்த ஏவுகணை முற்றிலும் இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டது.

இந்த ஏவுகணை இந்தியக் கடற்படைக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது, கடலில் அமைக்கப்பட்ட போர்க்கப்பலில் இணைத்து குறிப்பிட்ட இலக்கைத் தாக்கும் பயிற்சியை மேற்கொள்ளும் வகையில் உள்ளது. மூன்று மீற்றர் நீளம் கொண்ட இந்த ஏவுகணை, ஒலி அலைகளைவிட வேகமாகச் செல்லும் ஆற்றல் படைத்தது.

# நேபாளத்தில் நடந்த தாக்குதலில் 13படையினர் உட்பட 20பேர் பலி!



இலாம் மாவட்டத்தின் பூவா ஆற்றுப்பகுதியிலுள்ள வீதித் தடைகளை அகற்றிய பின்னர் இராணுவத்தினர் வந்துகொண்டிருந்த வேளையே, கிளர்ச்சிவாதிகள் மறைந்திருந்து தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**நேபாளிய படையினர் மீது, மாவோ கிளர்ச்சிவாதிகள் நாட்டின் கிழக்குப் பகுதி இலாம் மாவட்டத்தில் நடத்திய தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டதாக நேபாளிய இராணுவம் தெரிவித்துள்ளது.**

**இந்தப் பகுதியில் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து படைத் தரப்பிலிருந்து 50பேர் வரை உயிரிழந்துள்ளதாக நேபாளிய அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்றைய தாக்குதலில் படையினரின் இழப்பு 20ற்கு மேல் என மாவோ கிளர்ச்சிவாதிகள் தெரிவித்தபோதும் அது உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த மோதலில் ஆறு கிளர்ச்சிவாதிகளும் கொல்லப்பட்டனர்.**

ஆனால் கிளர்ச்சிவாதிகள் வீதியோரமாக புதைத்து வைத்திருந்த கண்ணிவெடிகளை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளையே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக பெயர் குறிப்பிடவிரும்பாத நேபாள இரா ணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே, நேபாள அரசாங்கமும், மாவோ கிளர்ச்சிவாதிகளும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாக லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச மனித உரிமை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

சட்டரீதியற்ற வகையில் இடம்பெறும் கொலைகள் அதிகரித்து வருவதாகவும், எனவே இரு பகுதியினரும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமெனவும் அது தெரிவித்துள்ளது.

## இந்தியாவின் குற்றச்சாட்டை பாகிஸ்தான் படையினர் மறுப்பு



(காஷ்மீர்)

இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர் பகுதிக்குள் பாகிஸ்தான் படையினர் தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலம் இரண்டு நாடுகளுக்குமிடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளதாக இந்தியப்படையினர் தெரிவித்த குற்றச்சாட்டை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்திய நிர்வாகத் திற்குட்பட்ட காஷ்மீரின் பூஞ் மாவட்டத்தின் மீது பாகிஸ்தான் படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாக இந்திய இராணுவம் குற்றம் சாட்டியிருந்தது.

இதனை மறுத்த பாகிஸ்தான் படையின் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சௌகத் சுல்தான் இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர் பகுதிக்குள் பாகிஸ்தான் படை ார் தாக்குதலை நடத்துவதற்கு எந்தவொ சாத்தியமுமில்லை. ஆனால் அவர்கள் ஷெல் தாக்குதல் சத்தத்தை கேட்டதாகவும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர்பகுதிக்குள் ஊடுருவுவதற்கு சாதகமாக பாகிஸ்தான் படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தியிருக்கலாமென இந்திய இராணுவ பேச்சாளர் லெப்.கேணல் சிப்பார் தெரிவித்தார்.

இந்த ஷெல் தாக்குதலில் பூஞ் மாவட்டத்தில் இளம் பெண்ணொருவர் காயமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் பாகிஸ்தான் படையினரின் இந்தத் தாக்குதலானது யுத்த நிறுத்தத்தை மீறும் வகையிலான வன்செயல் நடவடிக்கை எனவும் அவர் தெரிவித்தார்.

## எனக்குக் குழந்தை ஆசை இருப்பதில் தவறில்லை



'வயதான காலத்தில் தான் குழந்தை பெற்றது நியாயம் தான்' என ருமேனிய நாட்டு பெண் தெரிவித்துள்ளார்.

ருமேனிய நாட்டு பல்கலைக்கழக பேராசிரியரான அட்ரியானா இலியாஸ்கு (வயது 66) கடந்த வாரம இரட்டைப் பெண குழந்தைகளைப் பெற்றெடுத்தார். குறை பிரசவத்தில் பிறந்த இந்தக் குழந்தைகளில் ஒன்று இறந்துவிட்டது. கடந்த 1995 ஆம் ஆண்டுமுதல் செயற்கை கருவூட்டல் முறையில் இவர் குழந்தைபெற விரும்பினார். இரண்டு முறை இவரது முயற்சி தோல்வியடைந்துவிட்டது. குழந்தைப் பிரியரான அட்ரியானாவுக்கு தற்போது பிறந்துள்ள குழந்தை ஒன்றரைக் கிலோவுக்குக் குறைவான நிறை கொண்டதாகவுள்ளது. இந்தக் குழந்தைக்கு எலிஸா மரியா என பெயரிடப்பட்டுள்ளது.


வயதான காலத்தில் அட்ரியான குழந்தை பெற்றுள்ளமை, ருமேனியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுளளது. தள்ளாத வயதில இவர் எப்படி குழந்தையைப் பராமரிப்பார்? என பத்திரிகைகள் கேள்வி எழுப்பியுள்ளன.



கடந்த செவ்வாய்க்கிழமை இவரை பத்திரிகையாளர்கள் சூழ்ந்து கொண்டனர். 'உங்களுக்கு 80 வயதாகும்போது குழந்தைக்கு 13 வயதாக இருக்கும் இந்த வயதில் உங்களால் அந்தக் குழந்தையைப் பராமரிக்கமுடியுமா? உங்களுக்கு உடல்நிலை சரியாக இல்லாவிட்டால் அந்தக் குழந்தையால் உங்களுக்கு எந்த உதவியும் செய்யமுடியாதே?' என்பது போன்ற கேள்விகளைக் கேட்டுத் துளைத்தெடுத்தனர்.

இது குறித்து அட்ரியானா குறிப்பிடுகையில், 'எதிர்காலத்தில் யார் எப்படி இருப்பார்கள், என்பதை இப்போதே சொல்லமுடியாது. ஒரு பெண்ணுக்கு குழந்தைகள் இருப்பது அவசியம். நான் ஒரு சராசரி பெண். எனக்கும் குழந்தை ஆசை இருப்பதில் தவறில்லை' என்றார்.

## அபுகிராப் சிறைக் கைதிகளை இங்கிலாந்து இராணுவம் துன்புறுத்தும் படங்களும் தற்போது வெளிவந்துள்ளன



ஈராக் போர்க் கைதிகளை இங்கிலாந்து இராணுவம் சித்திரவதை செய்யும் கொடூரக் காட்சிகள் இங்கிலாந்து பத்திரிகைகளில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஈராக்கில் உள்ள அபுகிராப் சிறையில் அமெரிக்க வீரர்கள், ஈராக் வீரர்களை சித்திரவதை செய்தது தொடர்பாக எழுந்த பிரச்சினை நீதிமன்றம்வரை சென்று அமெரிக்க அதிகாரிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தது.

இதேபோன்று அந்தச் சிறையில் இங்கிலாந்து இராணுவத்தினரும், ஈராக் வீரர்களை சித்திரவதை செய்ததாகப் புகார்கள் கூறப்பட்டன. இது தொடர்பாக ஜெர்மனியில் உள்ள இங்கிலாந்து இராணுவ நீதிமன்றில் வழக்கு விசாரணை நடந்துவருகிறது.

இங்கிலாந்து இராணுவத்தினர் ஈராக் வீரர்களை சித்திரவதை செய்யும் புகைப்படங்களை சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆதாரமாக நேற்றுமுன்தினம் தாக்கல் செய்தனர். அவற்றில் பல ஆபாசமாகவும், நிர்வாணமாகவும் அருவருக்கத்தக்க வகையிலும் இருந்தன.

இந்தப் புகைப்படங்களில் சில நேற்றைய இங்கிலாந்து பத்திரிகைகளை ஆக்கிரமித்தன. 'வெட்கம், 'அதிர்ச்சி' என்ற தலைப்புக்களில் முதல் பக்கத்தில் ஆபாசமான, நிர்வாணமான படங்கள் பிரசுரமாகியுள்ளன. அவை இங்கிலாந்து நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஜெர்மனியில் உள்ள இங்கிலாந்து இராணுவ நீதிமன்றில் நடந்துவரும் வழக்கில் லான்ஸ் கோப்ரல்கள் டரன்லார்க்கின், மார்க் கூலி மற்றும் கோப்ரல் டானியல் கெனியான் ஆகிய 3 இங்கிலாந்து இராணுவ வீரர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அவர்கள் இந்தச் சித்திரவதைக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளனர். ஒரு ஈராக் வீரரை இங்கிலாந்து வீரர் ஒருவர் மட்டும் அடித்ததாக ஒரு குற்றச்சாட்டை மட்டும் ஒத்துக் கொண்டுள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் மே மாதம் இங்கிலாந்தில் தேர்தல் நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய பிரதமர் ரொனி பிளேயர் இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளார். இத்தகைய படங்கள் அவரது செல்வாக்கைக் குறைத்து அவரை வீழ்த்தி விடக்கூடும் என்று சில பத்திரிகைகள் எழுதியுள்ளன.

ரொனி பிளேயர் மீதான தனிப்பட்ட நம்பிக்கையைக் குறைக்கும் வகையில் இந்தப் புகைப்படக்காட்சிகள் அமைந்துள்ளன. இன்னும் 4 மாதத்தில் தேர்தல்வர இருப்பதால் ஈராக் போரில் அமெரிக்காவுடன் இங்கிலாந்து கூட்டுச் சேர்ந்தது சரிதானென ரொனி பிளேயர் மீண்டும் தன்னைப் பாதுகாக்கவேண்டிய கட்டாயத்துக்குள் இந்தப் புகைப்படங்கள் அவரைத் தள்ளியுள்ளன.

இந்தப் புகைப்படங்கள் வெளியானதை அறிந்த இங்கிலாந்து பிரதமர் ரொனிபிளேயர் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

'எல்லா நாட்டிலும் இராணுவத்தினர் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடத்தப்படவேண்டும். இங்கிலாந்து வீரர்கள், ஈராக் வீரர்களைச் சித்திரவதைசெய்வதுபோன்று வெளியான புகைப்படங்களை பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். அந்தப படங்கள் ஒவ்வொருவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும், திடுக்கிட வைக்கும். அதுபற்றி சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை' என்று இங்கிலாந்து நாடாளுமன்றில் அவர் தெரிவித்தார்.

### உலக நோக்கு

## ஜப்பானின் கிழக்குப் பகுதியில் சுனாமி தாக்குதல் அச்சம்!

ஜப்பானின் கிழக்குப்பகுதியில் நேற்று முன்தினம் பகல் 12.11 மணிக்கு பூகம்பம் ஏற்பட்டது. பசுபிக்பெருங்கடற் பகுதியில் கடலுக்கு அடியில் 10 கிலோமீற்றர் தூரத்தில் ஏற்பட்ட இந்தப் பூமி அதிர்ச்சி 6.8ரிக்டர் அளவில் பதிவாகி இருந்தது.

இதன் காரணமாக 50 செ.மீ அளவுக்கு சுனாமி அலைகள் உருவாகி ஜப்பானின் இஜு தீவு பகுதிகளைத் தாக்கலாம் என்று புவியியல் ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையே நேற்று முன்தினமிரவு 9.39 மணிக்கு இந்து சமுத்திரத்திலும் 5.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகி இருப்பதாக இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எப்படி உதவிகளை பெறுவது? நோர்வே குழுவுடன் பேச்சு!

## நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்களின் மூலம் தீர்வு காணப் படவேண்டும் என்ற ஆவலுடன் இருப்பதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் தனது பேட்டியில் -

இன்று நோர்வேயின் மேம்பாட்டு உதவி அமைச்சர், பிரதி வெளியுறவு அமைச்சர், நோர்வே தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரிடம் பேசினோம். நோர்வே உதவியை எப்படிப் பெறலாம். அதை எப்படி நிர்வகிப்பது என்பது பற்றி ஆராய்ந்தோம்.

நிவாரணம், மீள் கட்டமைப்பு உதவிகள் பற்றி நோர்வே குழுவினர் பேச்சு நடத்தினர். நிவாரணப் பணிகள் எப்படி நடக்கின்றது என்பதைப் பார்க்க அம்பாந்தோ[illegible]டை, முல்லைத்தீவு மற்றும் ப[illegible] இடங்களுக்கு நோர்வே குழுவினர் செல்லவிருக்கின்றனர்.

நிவாரணப் பணிகளை விடுதலைப் புலிகள் விநியோகிக்கத் தேவையில்லை. அவர்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்ற அமைப்பை வைத்திருக்கிறார்கள். அதுவும் ஒரு அரசசாரா அமைப்புதான். அவர்களும் மற்றைய அரச சாரா அமைப்புக்களுடன் சேர்ந்து பணியாற்றலாம்.

மேலும் வடக்கு - கிழக்கை எடுத்துக்கொண்டால் அங்குள்ள நிலப்பரப்பில் பெரும் பகுதி இன்னமும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் கூட அரசாங்க அதிபர்கள் இருக்கிறார்கள். அரசு இயந்திரங்கள் செயற்படுகின்றன.

கிழக்கே அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டத்தில் புலிகள் கட்டுப்பாட்டில் இல்லை. எனவே அங்கு புலிகளால் மட்டும் இந்த வேலையைச் செய்யமுடியாது. அவர்களுக்கும் செய்ய உரிமையிருக்கிறது. அங்கு அமைக்கப்பட்ட குழுக்களில் அவர்களும் இடம்பெற்றிருக்கிறார்கள். இந்த விடயத்தில் இணைந்து செயற்படவேண்டுமென்று கவனமாக உழைக்கிறோம்.

நம்முடைய கருத்துவேறுபாடுகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று இயற்கை நமக்கு போதித்த பாடம் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம். இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாக தீர்வுகாணப்படவேண்டுமென்று ஆவலோடு இருக்கிறோம் என்றார்.

# சுனாமி பற்றி வதந்தியால் அம்பாறை மக்கள் பதற்றம்

(அம்பாறை)

சுனாமி பேரனர்த்தத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் தற்போது கடும்மழை பெய்து வருவதனால் தாழ்நிலப் பகுதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கி மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் சுனாமி பேரலை வருகின்றதென நேற்று முன்தின்மிரவு பரப்பப்பட்ட வதந்தியால் நீலாவணை தமிழ்ப்பிரதேச மக்கள் அலறியடித்துக்கொண்டு ஓடி பெரும் அவஸ்தைக்குள்ளாகினர்.

நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் பரவிய இந்த வதந்தியால், வீடுகள் மற்றும் நலன்புரி நிலையங்களில் இருந்த மக்கள் பாதுகாப்புத் தேடி ஏனைய பிரதேசங்களை நோக்கி அவசர அவசரமாகச் சென்றனர்.

பின்னர் இது திட்டமிட்டு பரப்பப்பட்ட வதந்தியென்பது தெரியவந்ததும் மக்கள் தமது இடங்களுக்கு மீளத் திரும்பினர்.

இதேவேளை நேற்று கல்முனைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விஜயம் செய்து இஸ்லாமாபாத் எனும் கிராமத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்களை தற்காலிக இடமொன்றில் குடியமர்த்தும் நிகழ்வில் கலந்துகொண்டார் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளுமென பிரதமர் அங்கு தெரிவித்தார். (07)

# தமிழ் பகுதிகளை புனரமைக்குமென...

இங்கு கேணல் சூசை மேலும் பேசும்போது சுனாமியால் இலங்கையில் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசம் வடக்கு - கிழக்கேயாகும். வடக்கைப் பொறுத்தளவில் அதிகளவில் பாதிக்கப்பட்ட பிரதேசம் வடமராட்சி கிழக்கே ஆகும்.

இந்த மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டு ஒருமாத காலமாகின்றது. இந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான உருப்படியான எந்தவித துரித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், அம்பாந்தோட்டையில் சிங்கள மக்களுக்கு நிரந்தர வதிவிடம் அமைப்பதற்கு அடிக்கல்லை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டிவிட்டார்.

இன்று எமது பகுதி மக்கள் நலன்புரி நிலையங்களிலும், பாடசாலைகளிலும் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எமது மக்கள் படும் இன்னல்களை அரச அதிகாரிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளியுலகுக்குக் கொண்டுவரவேண்டும்.

இன்று எமது மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களால் அமைத்துக்கொடுக்கப்பட்டுவரும் தற்காலிக கூடாரங்கள் மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்றவாறானதல்ல.

இந்த நிறுவனங்கள் இக்கூடாரங்களில் மக்கள் வாழமுடியுமா என்பதனை சிந்தித்துப்பார்க்கவேண்டும். இந்தக் கூடாரங்களில் கண்டிப்பாக மக்களை வசிக்குமாறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் நிர்ப்பந்திக்கக்கூடாது. எனவே, அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்காலிக கூடாரங்களை அமைக்கும்போது, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வடிவமைக்கப்பட்ட மக்கள் வாழக்கூடிய தற்காலிக கூடாரங்களையே அமைத்துக் கொடுக்கவேண்டும்.

தென்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென சர்வதேசத்தினால் வீட்டு வசதிபோல் உள்ள கூடாரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. எமது பகுதி மக்களுக்கு இந்தக் கூடாரங்களை எடுத்து வருவதற்கு ஏன் அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை.

அரச அதிகாரிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் சுனாமியால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தைத் துரிதமாக மீள்புனர்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கான உறுதிப்பாடுகளை அரச அதிகாரிகளே மேற்கொள்ளவேண்டும். கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்துக்குள் தடுப்பு அணைகள் அமைக்கப்படவேண்டும்.

இந்தியாவின் கரையோரப் பகுதிகளில் இத்தகைய தடுப்பு அணைகள் இருந்தமையால் அந்தப் பகுதிகள் பாதிப்புக்குள்ளாகவில்லை.

மீன்பிடியை வளப்படுத்தும் நோக்கில் படகுகள், வலைகளை மட்டும் வழங்கினால் போதாது, நீண்டகால நோக்கைக் கருத்திற்கொண்டு பொருத்தமான மீன்பிடிப் படகுகள், படகு கட்டும் நிலையம், சந்தை என்பனவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும், என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (122)

## அரசாங்கம்...

வில்லையென எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்தனர்.

பிரதி அமைச்சருடனான சந்திப்பை முடித்துக்கொண்ட நோர்வே பிரதிநிதிகள் குழு நேற்று மாலை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து சுனாமி பேரனர்த்தத்திற்குப் பின்னரான நிலைமைகள் மற்றும் சமாதான செயற்பாடுகளின் தற்போதைய நிலை குறித்தும் ஆராய்ந்தது. இந்தச் சந்திப்பில் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் கில்டி எவ்.ஜோன்சனும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பை முடித்துக் கொண்ட நோர்வேக் குழு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமையும் சந்தித்துக் கலந்துரையாடியது.

இன்று காலை 6.15 மணிக்கு நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் கொழும்பு வரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த...

ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் மே மாதம் 17 ஆம் திகதிவரை நடைபெற இருக்கும் பரீட்சையில் ஒரு லட்சத்து 96 ஆயிரத்து 309 மாணவர்கள் பாடசாலையில் இருந்தும், 48 ஆயிரத்து 500 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

ஜூன் மாதத்தில் திட்டமிடப்பட்ட விசேட பரீட்சைக்குத் தோற்ற, பாதிக்கப்பட்ட மாணவர்கள் மத்தியில் இருந்து 3500 பேர்வரை தகுதி பெறுவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## அன்ரன்...

கொப்ரர் மூலம் இன்று காலை 11 மணிக்கு முன்னதாக கிளிநொச்சியை வந்தடைவார் என்று விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

நாளை தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடன் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான நோர்வே தூதுக்குழுவினரின் சந்திப்பில் கலந்துகொள்வதற்காகவே கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இன்று வன்னி வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பு...

நீண்டகால நிவாரணத் திட்டங்களை முன்னெடுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## பதவிக்காலத்தை...

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டில் தேர்தல்கள் நடத்தப்படமாட்டாதென்ற ஜனாதிபதியின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இந்த அனர்த்தத்தால் அனைத்து கட்சிகளும் இணைந்து செயற்படும் இந்தவேளை, ஜனாதிபதி தனது தனிப்பட்ட கட்சி அரசியலை முன்னிலைப்படுத்தியது துரதிஷ்டவசமானது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். இதில் எவ்வித மாற்றமும் இல்லை.

தற்போது மேற்கொள்ளப்படும் உதவிப்பணிகளானது வெளிப்படையானதும், சுதந்திரமானதாகவும் சகல கட்சிகளும் இணைந்து கொள்ளக்கூடிய ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படவேண்டும்.

எதிர்க்கட்சியுடன் எந்தவித கலந்துரையாடலும் இல்லாமல் அரசாங்கம் உதவிப்பணிகளுக்கான நிதியினை தனது சொந்த நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் பயன்படுத்தி வருகின்றது.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நிலை திருப்திகரமாக இல்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசியல் வாதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் அறிக்கைகள் மற்றும் நிவாரணம் வழங்குதல் செயற்பாடுகள் தொடர்பாக இந்த மக்கள் புரிந்துகொள்ள முடியாமலுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகம் மற்றும் மீள் கட்டுமானம் தொடர்பாக சகல கட்சிகளுடனும் கலந்துரையாடப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப்பணிகள் போதுமானவையாக இல்லை. இது தொடர்பாக அரசாங்கம் பொறுப்புணர்வுடன் செயற்படவில்லை.

சுனாமி பேரனர்த்தத்தால் 40 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். இந்தவேளை நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பது ஜனாதிபதியின் கடமையாகும்.

ஜனநாயகம் உயிர்வாழ வேண்டுமெனில் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஆனால் ஜனாதிபதி தெரிவித்த கருத்தானது அவரது சர்வாதிகாரப் போக்கையே வெளிப்படுத்துவதாக உள்ளதென அவர் மேலும் தெவித்தார்.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 97.87 | 98.53 |
| ஸ்ரேலிங் பவுண் | 182.82 | 184.50 |
| யூரோ | 126.85 | 128.19 |
| சுவிஸ் பிராங் | 82.02 | 83.16 |
| யென் | 0.9493 | 0.9604 |

வாணி விலாஸ்
சுன்னாகம்

வேலையாட்கள் தேவை

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுபவர்
- றொட்டி தயாரிப்பாளர்
- சிட்டை எழுதுநர்
- சிற்றூழியர்கள்

மேற்குறிப்பிட்ட நிலைகளுக்கு ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்
பின்வரும் சலுகைகள் வழங்கப்படும்.

- உணவு வசதி
- தங்குமிடவசதி

ஊழயர்கள் நேரில் 24.01.2005 இற்குமுன் தொடர்புகொள்ளவும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை, கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

கே.கே.எஸ்.றோட்,
சுன்னாகம். (சி-3747)

வாணி விலாஸ்
உரிமையாளர் வவா.

## மரண அறிவித்தல்

### கந்தையா செல்லையா



கருங்காலியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் தட்டா தெரு, இல 961 ஐ வதிவிடமாகவும் கொண்ட **கந்தையா செல்லையா** (முன்னர் செல்லையா ஸ்டோர்ஸ் சுன்னாகம் உரிமையாளரும், பதுளை செல்லையா என்று அழைக்கப்படுபவர்) 20.01.2005 ல் சிவபதமடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், முருகானந்தன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்துறை B.K), புவனேஸ்வரி, கதிர்காமநாதன் (ஸ்ரீ நாதன் களஞ்சியம் இல 961, K.K.S றோட், தட்டாதெரு, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திராதேவி, நடராசா (தீபிகா களஞ்சியம் நெல்லியான் வீதி, சுழிபுரம்), சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகுலன், கோபிகா, தீபிகா, அகிஜா, மயூரிகன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.01.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணி (புதியநேரம்) கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தலையாளி வைரவர் கோவிலடி
(பூனாறிமடத்தடி சந்தி),
சபாபதி லேன்,
கொக்குவில்,
யாழ்ப்பாணம். (சி-3751)

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.